# தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு
# பொது வழிமுறைகள்

## உயர்தொடக்க வகுப்புகள்
## VI - VIII

உருவாக்கம்


## மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம்
## சென்னை – 600006


www.kalvisolai.com

© STATE COUNCIL OF EDUCATIONAL RESEARCH AND TRAINING, CHENNAI-6
2012

**குழுத்தலைவர்**
**திரு. கு. தேவராஜன்,**
இயக்கநர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம்,
சென்னை **600006.**

**முனைவர் மு. பழனிச்சாமி,**
இணை இயக்குநர் (திட்டம்),
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி
நிறுவனம், சென்னை – **600006.**

**முனைவர் ச. கண்ணப்பன்**
இணை இயக்குநர் (நிருவாகம்),
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி
நிறுவனம், சென்னை – **600006.**

**மேலாய்வாளர்**
**திரு. ஜி. பாலசுப்பிரமணியன்,**
முன்னாள் இயக்குநர் (கல்வி),
மத்திய இடைநிலைக் கல்வி வாரியம்,
புதுதில்லி.

**நூலாசிரியர்கள்**

**திருமதி விஜயா சீனிவாசன்,**
தலைமையாசிரியர் (ஓய்வு),
லேடி ஆண்டாள் பதின்மப் பள்ளி,
சேத்துப்பட்டு, சென்னை.

**திருமதி சுமித்ரா கௌதமா,**
அவுட்ரீச் ஒருங்கிணைப்பாளர்,
தி ஸ்கூல், அடையாறு, சென்னை.

**திருமதி ஜெயஸ்ரீ,**
முதுகலை ஆசிரியர்,
கேந்திரிய வித்யாலயா,
சென்னை.

**திரு. எ. முத்துக்கிருஷ்ணன்,**
(மேனாள் கல்விப்பேரவைக்குழு உறுப்பினர்,
சென்னைப் பல்கலைக்கழகம்)
முதுநிலை விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம்,
திருவூர் – **602025**, திருவள்ளூர் மாவட்டம்.

**ஒருங்கிணைப்பாளர்கள்**

**திருமதி ப. ஈஸ்வரி,**
உதவிப் பேராசிரியர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி
நிறுவனம், சென்னை – **600006.**

**திருமதி க. சு. சங்கீதா,**
உதவிப் பேராசிரியர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி
நிறுவனம், சென்னை – **600006.**

www.kalvisolai.com

# பொருளடக்கம்


| இயல் எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1. | தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு – ஓர் அறிமுகம் | 1 |
| 2. | கல்விசார் மதிப்பீடு | 4 |
| 3. | கல்விசார் பகுதிகள் – மதிப்பீட்டு முறை | 10 |
| 4. | கல்வி இணைச் செயல்பாட்டுப் பகுதிகள் | 26 |
| 5. | மாற்றுத்திறனாளியர்களுக்கான மாற்றுமுறை மதிப்பீடு | 34 |
| 6. | தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டுடன் படைப்பாற்றல் கல்வியை ஒருங்கிணைத்தல் | 45 |
| 7. | சிறப்பாகச் செயல்படுத்துவதற்கான வழிமுறைகள் | 55 |
| 8. | இணைப்புகள் | 56 |


www.kalvisolai.com

www.kalvisolai.com

# 1. தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு – ஓர் அறிமுகம்

## தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டின் தோற்றமும் வளர்ச்சியும்

குழந்தைகள் சுமையின்றிக் கற்பதற்காக இந்தியக் கல்விமுறையில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1986ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்தியக் கல்விக்கொள்கையானது, தொலைநோக்குப் பார்வையோடு தொடக்கக் கல்வியில் புதிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது.

- ❖ குழந்தைகள் எளிதாக அணுகும்படி பள்ளியை அருகில் அமைத்து, அனைத்துக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்த்தல்
- ❖ 14 வயதுவரை குழந்தைகளைப் பள்ளியில் தக்கவைத்தல்
- ❖ அனைத்துக் குழந்தைகளும் போதுமான கற்றலடைவை அடையக் கல்வியின் தரத்தை மேம்படுத்துதல்

தொடக்கக் கல்வி நிலையில் குழந்தை மையக் கல்விமுறை மற்றும் செயல்வழிக் கற்றல் முறையைப் பின்பற்றுதல் வேண்டும். இத்தகைய கல்வி வாயிலாகக் குழந்தை வளர வளர பயிற்சிகளினால் அறிவுசார் கற்றல் (Cognitive Learning) மேம்படுத்தப்படுவதுடன் திறன்களும் ஒருங்கிணைக்கப்படுகின்றன.

தேசிய ஆலோசனைக்குழுவானது (National Advisory Committee) 1993இல் சுமையின்றிக் கற்றலை (Learning without burden) வலியுறுத்தி உள்ளது; மேலும், தேர்வுகளை மட்டுமே அடிப்படையாகக்கொண்டு கற்பிக்கும் முறைக்கும், பொருள் புரிந்துகொள்ளாமல் மனப்பாடம் செய்வதற்கும் முற்றுப்புள்ளி வைக்க வலியுறுத்தியுள்ளது. அத்துடன், கற்றல் மகிழ்ச்சியாக அமையவும், வாழ்க்கைக்குப் பயன்படும்படியாகவும் இருக்கவேண்டுமென வலியுறுத்தியுள்ளது. உண்மையான கல்வி என்பது, குழந்தைகள் வாழ்க்கையை எதிர்கொள்ளும்படியான வகுப்பறைச் சூழலைக்கொண்டு இருத்தல் வேண்டும்.

**தேசியக் கலைத்திட்ட வரைவு 2005** (National Curriculum Framework–2005) ஆனது, ஒவ்வொரு பள்ளியும் நெகிழ்வுத்தன்மைமிக்கதும் நடைமுறைப்படுத்தக் கூடியதுமான தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறையைச் செயல்படுத்த வேண்டுமெனப் பரிந்துரை செய்துள்ளது.



www.kalvisolai.com

**குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச்சட்டம் 2009,** மாணவர்களின் அறிவு, செயல்திறன் மற்றும் உள்ளார்ந்த திறனை வளர்த்தல்; செயல்பாடுகள் வாயிலாகக் கற்றல்; ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளை உள்ளடக்கிக் குழந்தைகள் விரும்பிக் கற்றல்; அச்சம், கவலை, மனஅழுத்தமின்றிச் சுதந்தரமாகத் தமது கருத்துகளை வெளியிடச் செய்தல்; தாங்கள் பெற்ற அறிவை வாழ்க்கையிலும் பயன்படுத்துதல் ஆகியவற்றுக்குத் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு வழிவகை செய்யுமெனக் கூறுகிறது.

மேற்குறித்த கல்விக் குறிக்கோள்களை எதிர்கொள்ளும் வகையில், தமிழக அரசானது, அரசாணை எண்: **143**, பள்ளிக்கல்வி (யு**2**) நாள்: **19.09.2011** அன்று தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டுமுறையை அறிமுகப்படுத்தியது. இம்முறையானது, **2012–2013**ஆம் கல்வியாண்டில் முதல் வகுப்புமுதல் எட்டாம் வகுப்புவரை நடைமுறைக்கு வருகிறது. **2013–2014**ஆம் கல்வியாண்டில் ஒன்பதாம் வகுப்புக்கும், **2014–2015**ஆம் கல்வியாண்டில் பத்தாம் வகுப்புக்கும் நடைமுறைக்கு வர உள்ளது.

**தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு** கீழுள்ள கூறுகளை உள்ளடக்கியுள்ளது.

- ⇒ கற்போரின் முழுமையான வளர்ச்சிக்கு வித்திடுதல்
- ⇒ கல்விசார் செயல்பாடுகள், கல்வி இணைச்செயல்பாடுகள்
- ⇒ கற்போர், தம் பலம் மற்றும் பலவீனத்தை அவ்வப்போது கண்டுணர்ந்து, தம்மை மேம்படுத்திக் கொள்ளும் வாய்ப்புகளை அளித்தல்
- ⇒ ஆசிரியருக்குத் தமது கற்பித்தல் நுட்பங்களை மேம்படுத்தத் தேவையான பின்னூட்டத்தையும் அவ்வப்போது வழங்குதல்

**தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டுமுறை வாயிலாக மாணவர் வளர்த்துக் கொள்ளும் திறமைகளாவன:**

- ❖ பலதரப்பட்ட பாடங்களில் எதிர்பார்க்கப்படும் அனைத்துக் கருத்துகளையும் கற்றுத் திறன் பெறுதல்
- ❖ தேவையான அளவில் பாடங்களில் கற்றலடைவைப் பெறுதல்
- ❖ தனியாள் ஆர்வத்தையும் கற்கும் ஆயத்தநிலையையும் மேம்படுத்துதல்
- ❖ நன்னலத்துடன் பயன்மிக்க வாழ்க்கையை வாழ்தல்
- ❖ பள்ளிக்குள்ளேயும் வெளியேயும் எதிர்கொள்ளும் சூழல்களுக்கு ஏற்றவாறு நடந்துகொண்டு, கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளுதல்
- ❖ கற்றவற்றை வெவ்வேறு சூழல்களில் பயன்படுத்துதல்



www.kalvisolai.com

- ❖ தானாகவும் பிறருடன் ஒருங்கிணைந்தும் இசைந்தும் மகிழ்ச்சியாகவும் வேலை செய்தல்
- ❖ தாம் கற்றவற்றைத் தாமே பகுப்பாய்வு செய்து மதிப்பீடு செய்யக் கற்றுக்கொள்ளுதல்
- ❖ சமூக மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த சிக்கல்களை அறிந்திருத்தல்
- ❖ சமூக மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த செயல்திட்டங்களில் பங்கேற்றல்
- ❖ தாம் கற்றவற்றைத் தக்கவைத்து வாழ்க்கையில் பயன்படுத்துதல்

**கருத்திற் கொள்ளவேண்டியவை**

- ❖ கற்போரை மெதுவாகக் கற்போர், இயல்பாகக் கற்போர், மீத்திறன்மிக்கோர் என வகைப்படுத்துதல் கூடாது.
- ❖ கற்போரை ஒருவருடன் மற்றொருவரை ஒப்பிட்டுப் பேசுதல் கூடாது.
- ❖ கற்போரைப் பற்றிய எதிர்மறையான கருத்துகளைத் தெரிவித்தல் கூடாது.

**தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு (CCE)**

**தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு என்பது,** வகுப்பறையில் கற்றல்–கற்பித்தல் நடைபெறும்போதே கல்விசார் மற்றும் கல்வி இணைச்செயல்பாடுகளில் கற்போரைத் தொடர்ந்து மதிப்பீடு செய்தலாகும்.

**தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டின் சிறப்புக் கூறுகள்:**

- ❖ கற்போரை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடுதலாகும்.
- ❖ இதில் 'தொடர்ந்து' என்பது, கற்போரைத் தொடர்ந்தும் குறிப்பிட்ட கால இடைவெளியிலும் மதிப்பீடு செய்தலாகும்.
- ❖ இதில், 'முழுமையான' என்பது, கற்போரின் வளர்ச்சியையும், அனைத்து நிலைகளையும் தொடர்ந்து உள்ளடக்கியதாக அமைந்துள்ள மதிப்பீட்டு முறையாகும். இது கல்விசார் மதிப்பீடு மற்றும் கல்வி இணைச்செயல்பாடுகளின் அனைத்துக் கூறுகளையும் உள்ளடக்கி முழுமை பெறச் செய்தலாகும்.
- ❖ இதில் 'மதிப்பீடு' என்பது, கற்போரின் நடத்தைகளையும் மனப்பான்மைகளையும், வாழ்க்கைத்திறன்களையும் கல்விசார் மதிப்பீடுகளுடன் மதிப்பிடுதலாகும்.
- ❖ தொடர் மதிப்பீட்டினால் கற்றல்–கற்பித்தலில் உள்ள குறைபாடுகளைக் களைந்து மேம்படுத்தலாம்.

தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடானது, **கல்விசார்** மற்றும் **கல்வி இணைச்செயல்பாடுகள்** வாயிலாக மதிப்பிடுதலாகும்.

**கல்விசார் மதிப்பீடு (Scholastic Assessment)**

- ❖ கற்போரின் அறிதல், புரிதல், பகுப்பாய்தல் மற்றும் பாடப்பொருளைப் பயன்படுத்தும் நிலைகளுக்கேற்பப் பல்வகை மதிப்பீட்டு உத்திகளையும், நுட்பங்களையும் கொண்டு கலைத்திட்டத்திலுள்ள அனைத்துக் கல்விசார் பாடங்களில் மாணவர்களின் கற்றல் திறன்களைப் பருவம் முழுவதும் மதிப்பீடு செய்தலாகும்.
- ❖ பாடப்பொருளைச் சிறுசிறு பகுதிகளாகக் கற்பித்துக் குறிப்பிட்ட இடைவெளிகளில் மதிப்பிடுதல் வாயிலாக மாணவர்களிடையே உள்ள அச்சத்தையும் மன அழுத்தத்தையும் குறைக்க வழிவகை செய்கின்றது.
- ❖ பல்வேறு மதிப்பீட்டு நுட்பங்களைக்கொண்டு மாணவர்களின் கற்றல் அடைவுகளை வளரறி மற்றும் தொகுத்தறி மதிப்பீடுகள் வாயிலாக மதிப்பிடுதலாகும்.
- ❖ இதில் உடற்கல்வியும் மதிப்பீடு செய்யப்படுகிறது.

**கல்வி இணைச்செயல்பாடுகளை மதிப்பிடுதல் (Co-scholastic Assessment)**

மாணவனின் ஒருங்கிணைந்த ஆளுமை வளர்ச்சியைக் கல்வி இணைச்செயல்பாடுகளைக் கீழுள்ள பகுதிகளின் வாயிலாக மதிப்பிடுதல்.

- ❖ வாழ்க்கைத்திறன்கள்
- ❖ மனப்பான்மைகளும் மதிப்புகளும்
- ❖ நன்னலம் மற்றும் யோகா / ஒருங்கிணைந்த உடற்பயிற்சி
- ❖ பாட இணைச் செயல்பாடுகள்

## கல்விசார் மதிப்பீடு

கல்விசார் மதிப்பீடு என்பது, கற்போரின் அறிதல், புரிதல், பகுப்பாய்வு மற்றும் பயன்படுத்தும் திறனை மதிப்பீட்டு உத்திகள்மூலம் அளவிடுவதாகும். கல்விசார் செயல்பாடுகளை வளரறி மதிப்பீடு மற்றும் தொகுத்தறி மதிப்பீடு என இருவகையில் மதிப்பிடலாம்.

**அ) வளரறி மதிப்பீடு – Formative Assessment (FA)**

வளரறி மதிப்பீடு என்பது, மாணவர்களின் கற்றலைக் **கல்விசார் மற்றும் கல்வி இணைச்செயல்பாடுகளைப்** பள்ளிச்சூழலிலும் வகுப்பறையிலும் பல்வேறு கற்றல் சூழலிலும் ஆசிரியர் தொடர்ந்து மதிப்பீடு செய்வதாகும்.



www.kalvisolai.com

இம்மதிப்பீடானது,

❖ கற்றல் நடைபெறும்பொழுது செய்யப்படுவது.
❖ ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைக்கிறது. மாணவர்களின் பல்வேறு கற்றல் நிலைகளை (பார்த்து, கேட்டு, செய்தும் கற்றல்) ஆசிரியரால் உற்றுநோக்கி மதிப்பிடுகிறது.
❖ மாணவர்களின் கற்றலைத் தூண்டுவதோடு ஆசிரியரையும் ஊக்குவிக்கிறது.
❖ மாணவர்களின் தேவையை அடையாளம் காண்பதற்கும், முன்னேற்றம் அடையச் செய்வதற்கும் உதவுகிறது.
❖ வகுப்பறையில், கற்றல் செயல்பாடுகள் மதிப்பீடு மற்றும் கருத்துப் பரிமாற்றத்திற்கு வழிவகுக்கிறது.
❖ தன்னுடன் பயிலும் மாணவர்களுக்குக் கற்றலில் ஆர்வத்தைத் தூண்டி, உதவ வழி செய்கிறது.
❖ கற்றல் குறைபாட்டிற்கான காரணத்தை ஆராய்ந்து, அதற்குத் தீர்வு காண வாய்ப்பளிக்கிறது.
❖ நெகிழ்வுத் தன்மையுடையது.

**வளரறி மதிப்பீடு** என்பது இருமுறைகளில் மதிப்பிடப்படுகிறது.

1. வளரறி மதிப்பீடு (அ) – செயல்பாட்டுமுறை
2. வளரறி மதிப்பீடு (ஆ) – சிறுதேர்வுமுறை

**1. வளரறி மதிப்பீடு (அ) – Formative Assessment - FA(a)**

வளரறி மதிப்பீடு (அ) என்பது, மாணவர்களின் உள்ளார்ந்த திறன்களை வெளிக்கொணரவும் ஆளுமைத்திறனை அறியவும் **கல்விசார் மற்றும் கல்வி இணைச்செயல்பாடுகளில் மாணவர்கள் ஈடுபடும்பொழுது,** அவர்களின் தன்னார்வம், ஈடுபாடு, பங்கேற்றல், விடாமுயற்சி, ஒழுங்குமுறை முதலிய பண்புகளை உற்றுநோக்கி ஆசிரியர் மதிப்பிடுதலாகும்.

வளரறி மதிப்பீடு (அ) FA (a) செயல்பாடுகள் வாயிலாகக் கற்பவர்களின் கற்றலில் உள்ள ஆர்வம் மற்றும் பங்கேற்றலை மட்டுமே மதிப்பிடுதல் வேண்டும். இச்செயல்கள் ஒவ்வொரு பாடப்பகுதியிலும் செயல்படுத்துதல் வேண்டும். எங்கெல்லாம் குழுச் செயல்பாடு நிகழ்கிறதோ அங்கெல்லாம் குழு மதிப்பீடு செய்தல் வேண்டும். ஆசிரியரின் உற்றுநோக்கல் மற்றும் இடைவினைபுரிதல் மூலமாக மாணவர்கள் செயல்படும் முறைகளை மதிப்பிடுதல் வேண்டும்.



www.kalvisolai.com

## 2. வளரறி மதிப்பீடு (ஆ) Formative Assessment - FA (b)

வளரறி மதிப்பீடு (ஆ) என்பது, குறிப்பிட்ட பாடப்பொருளில்/அலகில் மாணவர்களின் கற்றலடைவை அறிய, வாய்மொழியாகவும்/சிறு எழுத்துத் தேர்வு வாயிலாகவும் மதிப்பிடுதலாகும். **நெகிழ்வுத்தன்மைமிக்க** இம்மதிப்பீடு **பருவம் முழுவதும், பல்வகை வினாக்களை அமைத்து** மாணவர்களின் கற்றலடைவைச் சோதிக்கவும் குறைகளைக் கண்டறியவும் குறைதீர் கற்பித்தலுக்குத் திட்டமிடவும் துணைபுரிவதாகும்.

இம்மதிப்பீடானது,

- ஆசிரியரால் நடத்தப்பெறும் சிறு எழுத்துத் தேர்வாகும். (Slip test, Dictation, Sequencing, Missing letters, Labelling the diagram, Map marking etc.,)
- முதல் மற்றும் இரண்டாம் வகுப்புகளுக்கு எளிய எழுத்துத் தேர்வு அளிப்பதோடு, வாய்மொழியாக விடையளிக்க மிகுதியான வாய்ப்புகள் வழங்குதல் வேண்டும்.
- பாடப்பொருள் கற்பித்தபின் நடத்தப்பெறும்.
- கலைத்திட்டத்தின்படி பாடப்பொருள் சார்ந்ததாகவும் மாணவர்களின் ஈடுபாட்டினை மையப்படுத்தியும் அமைந்திருக்கும்.

மாணவரது கற்றல்சார் வளர்ச்சியைப் பருவம் முழுவதும் மதிப்பீடு செய்கிறது. வளரறி (ஆ) செயல்பாட்டுக்கான வினாக்கள், மாணவன் கற்றுக்கொண்ட பாடப்பொருளைப் பல்வேறுமுறையில் ஆய்ந்தறியும் வகையில் அமைக்கப்பட்டிருக்கும். ஆனால், வினாக்கள் பலதரப்பட்டதாக அமையும்.

## ஆ) தொகுத்தறி மதிப்பீடு – Summative Assessment (SA)

தொகுத்தறி மதிப்பீடு என்பது, மாணவரின் கல்விசார் கற்றலடைவை **எழுத்துத் தேர்வு** வாயிலாகப் பருவ இறுதியில் மதிப்பீடு செய்வதாகும். இம்மதிப்பீடு, **வினாத்தாள் திட்டவரைவின்படி** கற்றல் நோக்கங்களை வெளிக்கொணருமாறு **அறிதல், புரிதல், பொருளறிதல், பயன்படுத்தல், பகுத்தாய்தல், மதிப்பிடுதல், படைப்பாற்றல்** ஆகியவற்றின் அடிப்படையில் அமையும்.

தொகுத்தறி மதிப்பீடானது,

- ❖ வினாத்தாள் திட்ட வடிவமைப்பின்படி பருவ இறுதியில் நடத்தப்பெறும் எழுத்துத் தேர்வாகும்.
- ❖ அறிதல், புரிதல், பயன்படுத்தல், பகுத்தாய்தல், மதிப்பிடுதல், படைப்பாற்றல் அடிப்படையில் அமையும்.
- ❖ மாணவரின் கற்றல் அடைவுக்குச் சான்றளிக்கும் வகையில் அமையும்.
- ❖ காலவரையறைக்கு உட்பட்டதாகும்.

| வளரறி மதிப்பீடு - FA (a) & FA (b) | தொகுத்தறி மதிப்பீடு - SA |
|---|---|
| மாணவர் பாடத்தைக் கற்றுக் கொண்டிருக்கும்போதே நடைபெறும். | பாடத்தைக் கற்று முடித்த பின்னரே நடைபெறும். |
| முறைசார்ந்த மற்றும் முறைசாராத் தன்மையில் அமையும். | முறைசார்ந்து மட்டுமே அமையும். |
| பருவம் முழுவதும் நடைபெறும். | பருவத்தின் இறுதியில் மட்டுமே நடைபெறும். |
| குறைகண்டறிதல் மற்றும் குறைதீர்த்தல் அடிப்படையில் நடைபெறும். | கற்றலின் இறுதியில் பின்னூட்ட அடிப்படையில் நடைபெறும். |
| கால அளவு நெகிழ்வுத்தன்மைமிக்கது. | குறித்த கால வரையறைக்குள் நடைபெறும். |

## வளரறி மதிப்பீடு (அ) & (ஆ) – விளக்க அட்டவணை

| வளரறி மதிப்பீடு (அ) FA (a) | வளரறி மதிப்பீடு(ஆ) FA (b) |
|---|---|
| கற்றலில் மாணவர்களுக்கு உள்ள ஆர்வம் மற்றும் பங்கேற்பை மட்டும் மதிப்பீடு செய்கிறது. | பாடப்பொருளின் கற்றலடைவை மதிப்பீடு செய்கிறது. |
| வகுப்பறைக்கு வெளியேயும் உள்ளேயும் செயல்பாடுகள் அடிப்படையில் கற்கவும் கற்றலை வலுவூட்டவும் மேம்படுத்தவும் நடத்தப்பெறுகிறது. | பெரும்பாலும் வகுப்பறைக்கு உள்ளே சிறுதேர்வின் வழியே ஆசிரியர் கற்பித்தலை மதிப்பீடு செய்யவும் குறைதீர்வுக்கு வழி காணவும் நடத்தப்பெறுகிறது. |
| மாணவர்களிடையே பன்முகச் சிந்தனையைத் தூண்டுவதாகவும், பலவித விடைகளுக்கு வழி அமைப்பதாகவும் உள்ளது. | மாணவர்களிடையே கூர்சிந்தனையைத் தூண்டி, குறிப்பிட்ட விடையை மட்டும் பெறுவதற்கு வழி வகுக்கிறது. |
| கடினப் பகுதியை எளிமையாகக் கற்க மாணவர்களுக்கு உதவுகிறது. | கடினப்பகுதியில் மாணவர்களின் புரிதலை அறிய ஆசிரியர்களுக்கு உதவுகிறது. |
| தனி, இணைக்கற்றல் அல்லது குழுச் செயல்பாட்டுக்கு ஏற்றது. | தனிச்செயல்பாடுகளுக்கு ஏற்றது. |



www.kalvisolai.com

## வளரறி மதிப்பீடு – செயல்பாட்டு அட்டவணை

| வளரறி மதிப்பீடு (அ) – **FA (a)** செயல்பாடுகள் | வளரறி மதிப்பீடு (ஆ) – **FA (b)** செயல்பாடுகள் |
|---|---|
| பாடுதல் | உரிய விடையைத் தேர்ந்தெடுத்தல் |
| பொம்மலாட்டம் | சரியா, தவறா ? |
| பங்கேற்று நடித்தல் | ஓரிரு சொற்களில் விடையளித்தல் |
| ஒப்படைப்பு | நிலவரைபடத்தில் குறித்தல் |
| விவரங்களைத் திரட்டுதல் | பாகங்களைக் குறித்தல் |
| கலை மற்றும் கைவினைப் பொருள்கள் செய்தல் | கோடிட்ட இடத்தை நிரப்புதல் |
| விளையாடுதல் | பாடலை அடிபிறழாமல் எழுதுதல் |
| கதை சொல்லுதல் | அட்டவணைப்படுத்துதல் |
| சொல்வதை எழுதுதல் | சிறு வினாக்களுக்கு விடையளித்தல் |
| வினாடிவினா | பொருத்துதல் |
| சோதனை செய்தல் | வரிசைப்படுத்துதல் |
| புதிர்கள் | காலக்கோடு வரைதல் |
| மேலும் பல செயல்பாடுகள் பாடவாரியான கையேட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. | மேலும் பல செயல்பாடுகள் பாடவாரியான கையேட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. |



www.kalvisolai.com

## மதிப்பீட்டுப் பரிமாணங்கள்

### கற்றல் மதிப்பீடு

- ⇒ ஆசிரியர் கற்றல் நிகழ்வை வடிவமைக்கிறார்.
- ⇒ ஆசிரியர் மாணவரின் கற்றல் சார்ந்த தரவுகளைத் திரட்டுகிறார்.
- ⇒ ஆசிரியர், மாணவர் எதனைக் கற்றுக் கொண்டுள்ளனர், எதனைக் கற்றுக் கொள்ளவில்லை என்பன பற்றி முடிவெடுக்கிறார்.

### கற்றலுக்கான மதிப்பீடு

- ⇒ ஆசிரியர் கற்றல் நிகழ்வை வடிவமைக்கிறார்.
- ⇒ ஆசிரியர் மாணவரது கற்றலின் மதிப்பீட்டையும், பின்னூட்டத்தையும் **(Feedback)** வடிவமைக்கிறார்.
- ⇒ ஆசிரியர், மாணவர் என்ன கற்றுக் கொண்டார் என்பதனைத் தீர்மானிக்கிறார். (மாணவர் தாம் எவற்றைக் கற்றுக் கொள்ளவில்லை என்பதனைத் தானே உணர்ந்து கொள்கிறார்).

### மதிப்பீடே கற்றல்

- ⇒ ஆசிரியரும் மாணவரும் இணைந்து கற்றலை உருவாக்குகின்றனர்.
- ⇒ ஆசிரியரும், மாணவரும் இணைந்தே மதிப்பீட்டை உருவாக்குகின்றனர்.
- ⇒ ஆசிரியரும் மாணவரும் இணைந்தே கற்றல் வளர்ச்சி வரைபடத்தை உருவாக்குகின்றனர்.

### கற்றலில் மதிப்பீடு

- ⇒ ஆசிரியர் பயிற்சியாளராகவும் நெறியாளராகவும் இருக்கிறார்.
- ⇒ மாணவரே கற்றலின் மையமாக இருக்கிறார்.
- ⇒ மாணவத் தலைவர்கள் கற்றலை மதிப்பீடு செய்து அது குறித்துச் சிந்திக்கவும் செய்கிறார்கள்.
- ⇒ மாணவர், தாம் கற்றவற்றைத் தமக்கும் பிறருக்கும் தெரியும் வண்ணம் செய்து காட்டுகின்றனர்.

## 2. கல்விசார் பகுதிகள் – மதிப்பீட்டு முறை

**கல்விசார் பகுதிகள்**

கல்விசார்ந்த பகுதியின்கீழ் தமிழ், ஆங்கிலம், கணக்கு, அறிவியல், சமூக அறிவியல், உடல்நலக்கல்வி போன்ற பாடங்கள் (Subjects) அடங்கும். மாணவர்களுக்குக் கல்விசார்ந்த பகுதியில் வளரறி மதிப்பீட்டிற்கு 40 மதிப்பெண்களும், தொகுத்தறி மதிப்பீட்டிற்கு 60 மதிப்பெண்களும் வழங்கப்படும்.

**மதிப்பீட்டுத் திட்டம்**

**வளரறி மதிப்பீடு**

வளரறி மதிப்பீட்டுக்குக் கலந்துரையாடல், செயல்திட்டம், சொற்போர் முதலிய செயல்பாடுகள் வளரறி மதிப்பீடு (அ) FA(a)ஆகவும், அறிவுசார் திறமையை எழுத்துமூலமாக வளரறி மதிப்பீடு (ஆ) FA(b) ஆகவும் மதிப்பிடுதல் வேண்டும்.

வளரறி மதிப்பீடு (அ)வில், ஒவ்வொரு பாடத்திலும் (Subject) பத்து மதிப்பெண்களுக்கு, நான்கு செயல்பாடுகளை நிகழ்த்தி, அந்நான்கனுள் சிறந்த இரண்டு செயல்பாடுகளைத் தெரிவுசெய்து, இருபது மதிப்பெண்களைப் பதிவு செய்தல் வேண்டும். (2 X 10 = 20 மதிப்பெண்கள்)

வளரறி மதிப்பீடு (ஆ)வில், ஒவ்வொரு பாடத்திலும் (Subject) பத்து மதிப்பெண்களுக்கு நான்கு சிறு தேர்வுகளை நிகழ்த்தி அவற்றுள் சிறந்த இரண்டு சிறு தேர்வு மதிப்பெண்களைப் பதிவுசெய்தல் வேண்டும். (2 X 10 = 20 மதிப்பெண்கள்)

வளரறி மதிப்பீடு (அ) & (ஆ) இரண்டனையும் சேர்த்து 40 மதிப்பெண்களுக்குப் பதிவு செய்தல் வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு பருவத்திலும் 40 மதிப்பெண்களுக்கு வளரறி மதிப்பீடு மேற்கொள்ளுதல் வேண்டும்.

**தொகுத்தறி மதிப்பீடு**

ஒவ்வொரு பாடத்திலும் (Subject) பருவ இறுதியில் தொகுத்தறி மதிப்பீடு நடத்தப்படுதல் வேண்டும். இது வினாத்தாள் திட்ட வரைவின் அடிப்படையில் அமைந்த எழுத்துத் தேர்வாகும். அறிதல், புரிதல், பயன்படுத்துதல் இவற்றோடு சிந்தனையைத் தூண்டும் வினாக்களையும் உள்ளடக்கியதாக வினாத்தாள் அமைதல் வேண்டும். வினாக்களின் கடினத் தன்மை எளிமை–15%, சராசரி – 70% , கடினம் – 15% என்றவாறு அமைத்தல் வேண்டும். வினாக்கள் 60 மதிப்பெண்களுக்கு மட்டுமே உரியதாக அமைத்தல் வேண்டும். கல்வி ஆண்டின் ஒவ்வொரு பருவ இறுதியிலும் ஒரு தொகுத்தறி மதிப்பீடு (SA) இருக்கும்.



www.kalvisolai.com

**கல்விசார் பகுதிகளின் மதிப்பீட்டு அட்டவணை**

| வ. எண் | பருவம் | மதிப்பீட்டு வகை | மதிப்பீட்டு முறை | கால அளவு | மதிப்பெண் |
|---|---|---|---|---|---|
| 1. | முதல் பருவம் | வளரறி 1 | அ மற்றும் ஆ | ஜூன் முதல் செப்டம்பர் வரை | 20 + 20 |
| | | தொகுத்தறி 1 | எழுத்துத் தேர்வு | செப்டம்பர் மூன்றாவது வாரம் | 60 |
| 2. | இரண்டாம் பருவம் | வளரறி 2 | அ மற்றும் ஆ | அக்டோபர் முதல் டிசம்பர் வரை | 20 + 20 |
| | | தொகுத்தறி 2 | எழுத்துத் தேர்வு | டிசம்பர் மூன்றாவது வாரம் | 60 |
| 3. | மூன்றாம் பருவம் | வளரறி 3 | அ மற்றும் ஆ | ஜனவரி முதல் ஏப்ரல் வரை | 20 + 20 |
| | | தொகுத்தறி 3 | எழுத்துத் தேர்வு | ஏப்ரல் இறுதி வாரம் | 60 |

**உடற்கல்வி**

கல்விசார் மதிப்பீட்டின் ஒரு பகுதி உடற்கல்வியாகும். ஆசிரியர் உடற்கல்வி பாடத்தை மதிப்பீடு செய்து, தரம் மற்றும் மதிப்பெண் பதிவேட்டில் குறித்தல் வேண்டும். மேலும் இதனை மாணவர்களின் திரள் பதிவேட்டிலும் குறித்தல் வேண்டும்.

| உடற்கல்விப் பாட மதிப்பீட்டிற்கான விளக்கக் குறியீடுகள் | | | | |
|---|---|---|---|---|
| உடல் தகுதி | தான்தொடங்காற்றல் மற்றும் உடற்கல்வியில் ஆர்வம் | விளையாட்டு அல்லது தடகள நிகழ்வில் செயல்திறன் | விளையாட்டு விதிகளைப் பின்பற்றுதல் | விளையாட்டு வீரருக்குரிய தகுதிகள் பெற்றிருத்தல் |

**உடற்கல்விக்கான ஐந்து நிலைத் தரப்புள்ளிகள்**

| தரநிலை | தரப்புள்ளி | தர விளக்கம் |
|---|---|---|
| **A** | **5** | **சிறப்பு நிலை** (ஐந்து தரக் குறியீடுகளையும் பெற்றவர்) |
| **B** | **4** | **மிக நன்று** (நான்கு தரக் குறியீடுகளை மட்டும் பெற்றவர்) |
| **C** | **3** | **நன்று** (மூன்று தரக் குறியீடுகளை மட்டும் பெற்றவர்) |
| **D** | **2** | **திருப்திகரம்** (இரண்டு தரக் குறியீடுகளை மட்டும் பெற்றவர்) |
| **E** | **1** | **முயற்சி தேவை** (ஒரு தரக் குறியீட்டினை மட்டும் பெற்றவர்) |

**செயல்பாடு மற்றும் தரத்தினைப் பதிவு செய்தல்**

1. மாணவர்கள் பருவவாரியாகத் தாங்கள் முடித்த வளரறி மதிப்பீட்டினை FA (a) & FA (b) பதிவு செய்யும்பொருட்டுக் கல்விசார் செயல்பதிவேடு ஒன்றனை ஒவ்வொரு பாடப்புத்தகத்திலும் (Subject) இணைத்தல் வேண்டும். (இணைப்பு – 1)

அ) ஒவ்வோர் இயலிலும் வளரறி மதிப்பீட்டுக்கான செயல்பாடுகள் பாடப்புத்தகத்தில் வழங்கப்பட்டுள்ளது. தேவைப்படின், கூடுதல் செயல்பாடுகளை ஆசிரியர் உருவாக்கிக் கொள்ளலாம்.

ஆ) மாணவரின் வளரறி மதிப்பீடு சார்ந்த மதிப்பீட்டினை ஆசிரியர் மதிப்பீட்டுப் பதிவேட்டில் குறித்தல் வேண்டும். (இணைப்பு – 2)

இ) சிறப்பியல்புத் தன்மையுடைய குழந்தைகளுக்கு, வளரறி மதிப்பீட்டுக்கான செயல்பாடுகளை மேற்கொள்ளும்போது, இயலாக் குழந்தைகளுக்கான உள்ளடக்கிய கல்வி வழிகாட்டுதலின்படி பதிவேட்டினைப் பராமரித்தல் வேண்டும். (இணைப்பு–4)

- பருவங்கள் தோறும், ஆசிரியர் மதிப்பீடு செய்யும் பதிவேட்டில் வளரறி மற்றும் தொகுத்தறி **தரம் மற்றும் மதிப்பெண்** குறிப்பிடுதல் வேண்டும்.
- பருவங்களின் இறுதியில் நடைபெறும் தொகுத்தறி மதிப்பீட்டுக்கான மதிப்பெண் மற்றும் தரம் பதிவேட்டில் குறித்தல் வேண்டும்.
- மதிப்பெண் பதிவேட்டிற்குப் பதிலாகத் ‘தரம் மற்றும் மதிப்பெண் பதிவேடு’ என அழைக்கப்படும்.
- மாணவர்களுக்கான கல்விச்செயல்பாடுகள், பாடத்தில் உள்ள பாடத்தோடு தொடர்புடையதாக அமைத்து, ஆசிரியர் கையேட்டில் இடம்பெறுதல் வேண்டும்.
- புத்தகத்தில் உள்ள வளரறி மதிப்பீட்டுக்கான FA (a) & FA (b) செயல்பாடுகள் மட்டுமின்றிக் குறைதீர் கற்பித்தல், மாற்றுத்திறனாளியர்களுக்கான கற்பித்தல் போன்ற பிற செயல்பாடுகளுக்கும் மதிப்பெண் மற்றும் தரநிலையை ஆசிரியர்கள், மாணவர்களுக்கு வழங்குதல் வேண்டும்.
- மாணவர்களின் திரள் பதிவேட்டில் (Cumulative Record) வளரறி மற்றும் தொகுத்தறி மதிப்பீட்டில் வழங்கப்பட்ட தரநிலையை மட்டும் பதிவு செய்தல் வேண்டும். (இணைப்பு–5)



www.kalvisolai.com

## வளரறி மதிப்பீடு (அ), வளரறி மதிப்பீடு (ஆ), தொகுத்தறி மதிப்பீட்டிற்கான செயல்பாடுகள் மற்றும் தரநிலைகள்

### வளரறி மதிப்பீடு (அ) – விளக்கக் குறிப்புகள்

- ❖ பங்கேற்றல் (Participation)
- ❖ தன்னார்வம் (Initiative)
- ❖ ஈடுபாடு (Involvement)
- ❖ ஒழுங்குமுறை (Regularity)
- ❖ படைப்பாற்றல் திறன் (Creative Effort)

மாணவனின் செயல்பாடுகளை மதிப்பிடும்பொழுது அடைவுத்திறன் மட்டுமின்றி, மேற்குறிப்பிட்ட பொதுவான ஐந்து விளக்கக் குறிப்புகளை மனத்திற்கொண்டு மதிப்பீடு செய்தல் வேண்டும்.

பல்வேறு வகையான வளரறி செயல்பாடுகளை மதிப்பீடு செய்வதற்கான சிறப்பு விளக்கக் குறிப்புகள் அட்டவணை – II இல் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாணவனின் செயல்பாட்டுக்கு ஏற்ற தனித்தனியான குறிப்புகளை அந்தந்த விளக்கக் குறிப்புக்கு எதிரில் குறித்தல் வேண்டும். கற்பவரை மதிப்பீடு செய்வதற்காக, ஆசிரியருக்கு உதவும்வகையில் இக்குறியீடுகள் உருவாக்கப்பட்டுள்ளன. இச்செயல்பாடுகளில் சரியான விடை/கருத்து ஒன்றே என்பது இல்லை; பல்வேறுபட்ட விடைகள்/கருத்துகள் மாணவர்களிடமிருந்து வெளிப்படலாம்.

- பாடம் சார்ந்தது, பாடத்தோடு தொடர்புடையது, ஆசிரியர்கள், பள்ளிகள் மூலமாகப் பரிந்துரைத்தது, கற்றல் அட்டைகள், கருத்துரு வளநூல்கள், குறைதீர் கற்றல் நூல்கள், மாற்றுத் திறனாளியர்களுக்கான நூல்கள் போன்றவற்றிலிருந்து வளரறி மதிப்பீட்டிற்கான செயல்பாடுகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.
- மாணவர்களுக்கு வளரறி மதிப்பீட்டுக்கான நான்கு செயல்பாட்டினைக் கொடுத்து, அந்த நான்கனுள், அவர்கள் சிறப்பாகச் செய்துமுடிக்கும் இரண்டு செயல்பாட்டினைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். அவ்விரு செயல்பாட்டினுள் அவர்களுடைய மிகுந்த ஈடுபாடு, தொடங்காற்றல் மற்றும் பங்களிப்பினைக் கண்டறிதல் வேண்டும். அத்துடன் அவர்களின் மதிப்பெண் மற்றும் தரநிலையை மாணவர்க்கு வழங்குதல் வேண்டும்.
- பாடநூலில் இணைக்கப்பட்டுள்ள மாணவர் செயல்பதிவேட்டில் (என்னால் முடியும், நானே செய்வேன், என் பதிவேடு) ஒவ்வொரு மாணவனும் **FA (a)** தான் முடித்த செயல்பாட்டினைப் பதிவுசெய்தல் வேண்டும். மாணவனின் செயல்பாட்டைப் பொருத்துச் சிறப்புநிலை, நன்று, திருப்திகரம், முயற்சி தேவை எனக் குறித்தல் வேண்டும்.
- பாடத்துடன் தொடர்புடைய இணைச்செயல்களாவன:



www.kalvisolai.com

படைப்பாற்றல் திறன், மனவரைபடம், நடிப்புத்திறன், பொம்மலாட்டம், தனியாள் ஆய்வு, குழுச் செயல்பாடு, உற்று நோக்கும் திறன், கதை சொல்லுதல், ஆய்ந்தறியும் திறன், வெளிப்படுத்தும் திறன், சொற்போர் மற்றும் கலந்தாய்வு, படத்தொகுப்பு, செய்தித் திரட்டு, களப்பணி, கலை மற்றும் கைவினைப் பொருள்கள் செய்தல் ஆகிய பாடத்துடன் இணைந்த செயல்களின் மூலமாக வளரறி தேர்விற்கான FA(a) செயல்பாடுகளை அமைத்துக் கொள்ளலாம்.

**வளரறி மதிப்பீடு FA (a) பதிவுசெய்தல்**

வளரறி மதிப்பீட்டுக்கான செயல்பாடுகளை ஆசிரியர்கள் கீழ்க்காணும் இருவகைப் பதிவேடுகளில் பதிவுசெய்தல் வேண்டும்.

**அ. மாணவர் செயல்பதிவேடு**

மாணவர்களின் பாடநூலில் இணைக்கப்பட்டுள்ள ‘கல்விசார் செயல் பதிவேட்டில்’ மாணவர், தாம் முடித்த செயல்பாட்டினை அவர்கள் மூலமாகவே பதிவுசெய்தல் வேண்டும். அப்பதிவேட்டிலேயே செயல்பாடு குறித்த தரநிலைக் குறியீடுகளைப் பயன்படுத்தி, மாணவர் செயல்பதிவேட்டில் உள்ள குறிப்பிற்கான பகுதியில் ஆசிரியர்கள் அட்டவணை – **IV**இல் உள்ளவாறு குறித்தல் வேண்டும்.

அ. மிக நன்று (***)

ஆ. நன்று (**)

இ. திருப்திகரம் (*)

ஈ. முயற்சி தேவை (✔)

**அட்டவணை – I**

| மதிப்பெண் 10 | தரநிலை | விளக்கம் |
|---|---|---|
| 10 | மிக நன்று *** | • செயல்பாட்டினை முழுமையாகவும் தெளிவாகவும், ஒழுங்குடனும் முடித்தல்<br>• செயல்பாட்டினை உரியமுறையில் செய்தல் மற்றும் படைப்பாற்றல் திறன் வெளிப்படும் வகையில் முடித்தல்.<br>• செயல்பாட்டினை அறிவார்ந்தமுறையில் முடித்தல் |
| 8–9 | நன்று** | • செயல்பாட்டினை முழுமையாக, ஒழுங்காக, உயர்ந்த முறையில் மற்றும் கவனமாகவும் செய்து முடித்தல் |
| 6–7 | திருப்திகரம்* | • செயல்பாட்டினை முழு ஈடுபாட்டுடன் முடித்தல் |
| 5 | முயற்சி தேவை ✔ | • செயல்பாட்டினை நிறைவுசெய்ய வேண்டியிருந்தாலோ, ஈடுபாடு தேவைப்பட்டாலோ இக்குறியீட்டினை இடுதல் வேண்டும் |



www.kalvisolai.com

**ஆ. ஆசிரியர் செயல்பதிவேடு**

மாணவரால் முடிக்கப்பட்ட செயலுக்கான மதிப்பெண்களை ஆசிரியர் தமக்கான பதிவேட்டில் பதிவுசெய்தல் வேண்டும். பாடவாரியாக நான்கு செயல்களுக்கும் உரிய மதிப்பெண்களைத் (மதிப்பெண் 10–க்கு) தனித்தனிக் கட்டங்களில் பதிவு செய்தல் வேண்டும்.

வளரறி மதிப்பீட்டுக்கான FA (a) செயல்முறைகளுக்கான மதிப்பெண்களை இணைப்பு – 2இல் பதிவு செய்தல் வேண்டும். ஒவ்வொரு செயல்பாடும் 5 விளக்கக் குறிப்புகளைக் கொண்டு (இணைப்பு – II) மதிப்பிடப்படுகிறது. ஒவ்வொரு விளக்கக் குறிப்புக்கும் 2 மதிப்பெண்கள் அளிக்கப்படுகிறது. அதிகமாக ஒவ்வொரு செயல்பாட்டிற்கும் 10 மதிப்பெண்கள் வழங்கப்படுகிறது. மதிப்பீட்டின் வகையாக ஒவ்வொரு வகுப்பிற்கும் சுய மதிப்பீட்டுத்திறன் மற்றும் பிழைகளைப் பகுப்பாய்வு செய்தல் போன்றவை இணைக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை – II**
**கல்விசார் செயல்பாடுகளுக்கான விளக்கக் குறிப்புகள்**
**வளரறி மதிப்பீடு (அ) – FA(a)**

## பாடுதல் (Singing)

பாடப்பகுதியிலுள்ள பாடல்களை இசையுடன் குரல் ஏற்ற இறக்கத்துடன் பாடுவதற்கு மாணவர்களை ஊக்குவித்தல் வேண்டும். மேலும், குறிப்பிட்ட பாடல் பகுதியிலிருந்து உனக்குப் பிடித்தது என்ன என்றும், பாடல் கருத்துடன் தொடர்புடைய செய்திகள் பற்றி நீ படிக்க விரும்புகிறாயா என்றும் ஆசிரியர் கேட்டல் வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| மகிழ்ச்சியுடன் பங்கேற்றல் | பாடலின் கருத்தைப் புரிந்து கொள்ளுதல் | பொருள் நயமறிந்து பாடுதல் | ஒலிநயத்துடன் பாடுதல் | தாள இசைக் கேற்பப் பாடுதல் |

## பாடலை மனப்பாடம் செய்தல் (Poetry Recitation)

மாணவர்கள் பாடப்பொருளைத் தெளிவாகவும், பொருள் புரிந்தும் மனப்பாடம் செய்தல் வேண்டும். எடுத்துக்காட்டாக, தான் விரும்பும் பகுதியைப் புத்தகத்திலிருந்தோ செய்யுளிலிருந்தோ, பாடப்பொருளிலிருந்தோ மனப்பாடம் செய்யும் திறனை வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| பாடலை நினைவிற்குக் கொண்டுவரும் திறன் | பாடலைப் பொருளுடன் பொருத்திப் பார்க்கும் திறன் | பாடல் நயத்தைப் பாராட்டுதல் | நினைவாற்றலை மேம்படுத்துவதற்கான ஆர்வமும் ஈடுபாடும் | மனப்பாடம் செய்வதற்கான முயற்சியை மேற்கொள்ளுதல் |



www.kalvisolai.com

## நினைவுகூர்தல் (Memory Activity)

மாணவர்கள் மனப்பாடம் செய்வதற்கேற்ற வாய்ப்புகளை உருவாக்குதல் வேண்டும். சான்றாக, விரும்பிப் படித்த நூல்களிலிருந்து சில பொன்மொழிகள், வாய்பாடுகள், வகைப்பாடுகள், சூத்திரங்கள், வரையறைகள் இன்னபிற.

| | | | | |
|---|---|---|---|---|
| நினைவுகூரும் திறன் | பாடப்பொருளுடன் தொடர்புபடுத்தும் திறன் | பொருள் நயத்தை இடத்திற்கேற்பப் பொருந்துமாறு பயன்படுத்துல் | மகிழ்ச்சியுடன் ஈடுபட்டு நினைவு கூர்தலை மேம்படுத்துதல் | நினைவிலுள்ள கருத்துகளை ஏற்ற இடத்தில் பயன்படுத்தும் திறன் |

## பொம்மலாட்டம்(Puppetry)

பொருத்தமான பாடப்பொருளைப் பொம்மலாட்டத்தின் வாயிலாகக் கற்பிக்கலாம். மாணவர்களையே பொம்மலாட்டத்தை நிகழ்த்தும்படி ஊக்குவிக்கலாம். இதனால், மாணவர்களிடையே உள்ள அச்சத்தைப் போக்குவதோடு அனைவரும் அறியச் செய்யவும் பாடப்பொருளை வலுவூட்டவும் கற்றலை நிலைபெறச் செய்யவும் துணைநிற்கும்.

| | | | | |
|---|---|---|---|---|
| பொம்மைகளை அழகாகச் செய்தல் | தங்குதடையின்றித் தொடர்ந்து உரையாடுதல் (பொருத்தமான இடங்களில்) | ஈடுபாட்டுடன் விளக்குதல் | கதை மாந்தர்களை உருவாக்குதல்/புதுச் சிந்தனைகளைப் படைத்தல் | பாடப்பொருளை ஒருங்கிணைத்து வழங்கும் திறமை |

## பங்கேற்று நடித்தல்(Role play)

கொடுக்கப்பட்ட பாடப்பகுதியிலிருந்தோ கருத்துகளைப் புலப்படுத்துவதற்கோ சிறு உரையாடல் வடிவம் எழுதி, மாணவர்களைப் பங்கேற்று நடிக்கச் செய்யலாம். அறிவியல் மற்றும் கணக்குப் பாடத்திலும் பாடப்பொருள் கருத்தைத் தெளிவுபடுத்த பங்கேற்று நடித்தல் செயலை மேற்கொள்ளலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| பங்கேற்றல் | குரல்வளம் | நடித்தலுக்கான முன்னேற்பாடுகள் | கருத்துச் செறிவு | பாத்திரம் ஏற்று நடித்தல் |

## கைவினைச் செயல் (Craft)

நாட்டின் கலை மற்றும் பண்பாடுகள் குறித்த செய்திகளைக் கைவினைப்பொருள்கள் செய்வதன் வாயிலாக அறியச் செய்யலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| நுண்செயல் திறன் | பணிகளை முறையாகச் செய்தல் | கருத்தும் வடிவமும் பொருந்தியிருத்தல் | கலையுணர்வு வெளிப்பாடு | பணிமுடிந்தபின் இடத்தை ஒழுங்குபடுத்தும் முறை |



www.kalvisolai.com

### உருவ மாதிரி செய்தல் (Model Making)

அறிவியல் மற்றும் புவியியல் பாடப்பகுதிகளில் மின்சுற்று, பள்ளத்தாக்கு போன்ற மாதிரி உருவங்கள் செய்யலாம். மாதிரி வடிவங்கள் பாடப்பொருளுடன் நேரிடையாகத் தொடர்பு கொண்டிருக்க வேண்டும் என்பதில்லை.

| | | | | |
|---|---|---|---|---|
| உருவ மாதிரியை முழுமையாகச் செய்து முடித்தல் | உருவ மாதிரியின் வடிவம் | உருவ மாதிரியைச் செய்வதற்கான படிநிலைகள் | பாடப்பொருளுக் கான பொருத்தம் | கற்றலை விரிவாக்கு வதற்கான திறமை |

### படப்புத்தகம் (Scrap Book)

மாணவர்கள் பலவகைப் பொருள்களைத் திரட்டி, அவற்றை வகைப்படுத்தச் செய்தல், அவற்றைப் பற்றிய கருத்துகள், எண்ணங்கள் மற்றும் கற்றல் அனுபவங்களைப் பதியச் செய்தல்.

| | | | | |
|---|---|---|---|---|
| கருத்தாழம் | படைப்புகளைச் செய்தமுறை | பொருள்களைக் காட்சிப்படுத்துதல் | கற்றலை விரிவாக்குதல் | உருவ மாதிரியை மெருகூட்டுவதற்கான முயற்சி (வண்ணமேற்றல், வண்ணக்கலவை, முதலியன. |

### ஆட்டங்கள் (Games)

விளையாட்டுமூலம் பாடம்சார்ந்த கருத்துகளை அறிமுகம் செய்யவும் மீளாய்வு செய்யவும் தொகுக்கவும், வலுவூட்டவும் செய்யலாம். (சான்றாகப் 'புதையலைக் கண்டுபிடி' விளையாட்டு)

| | | | | |
|---|---|---|---|---|
| செயலில் காட்டும் ஈடுபாடு | செயல் சார்ந்த திறனை அடைவதற்கான முயற்சி | பங்கேற்றலில் விருப்பமும் வழிகாட்டுதலைப் பின்பற்றலும் | மேலாதிக்கம் செய்ய முயலாமை/மற்ற விளையாட்டுவீரர்களை அதட்டி மிரட்டாமை | ஆட்டத்தின் வாயிலாகப் பாடப்பொருளை அறிதல் |

### கதைகளைக் கேட்டல் (Listening to Stories)

குழந்தைகளைக் கதை கேட்கச் செய்து, அவர்கள் அக்கதையைக் கேட்கும்போது இயற்கையாக வெளிப்படுத்தும் சொற்கள், செயல்களைக்கொண்டு மதிப்பிடலாம். குழந்தைகளின் தனித்தன்மை வெளிப்பாடுகளை ஒப்புக்கொண்டு, தேவைப்பட்டால் அவர்களுடன் சேர்ந்து செயல்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| கதை நிகழ்வை உற்றுக்கேட்டல் | உற்றுக் கேட்டலைத் தானோ பிறரோ சிதறச் செய்தல் கூடாது | ஈடுபாட்டை வெளிப்படுத்துதல் (கதை நிகழ்வைப் பழித்தல், வினாக்கள் கேட்டல், முதலியன) | ஆசிரியரின் கவனத்தை மேலாதிக்கம் செய்தல் கூடாது | கதை நிகழ்வின் தொடர்பினையும், முடிவினையும் திறமையுடன் கூறுதல் |

### கதை கூறுதல் (Story Telling)

கதை கூறுதலில் குழந்தைகளுக்குச் செய்துதரும் வசதிகள், அவர்களுக்குத் தன்னம்பிக்கையையும், கதையைக் குரல் ஏற்றஇறக்கத்துடன் உணர்ச்சியோடு கூறும் ஆற்றலையும் தரும்.

| | | | | |
|---|---|---|---|---|
| கதையைத் தெளிவாகக் கூறுதல் | கதை நிகழ்வைத் தொடர்ச்சியாகவும் விளங்கும்படியும் கூறுதல் | பொருத்தமான உடலசைவுகளைப் பயன்படுத்துதல் | கதை கேட்போரைத் தன்பால் ஈர்க்கும் ஆற்றல் | தன்னுடைய கருத்துகளைக் கதையுடன் சேர்க்கும் திறமை (பாத்திரங்களின் நடத்தைகள், பிற) |

### கதை எழுதுதல்(Story writing)

குழந்தையின் மொழி, இலக்கியம், பொதிந்துள்ள படைப்பாற்றல் ஆகியவற்றை வளர்த்தல் வேண்டும். குழந்தையின் கற்றல் நோக்கங்களில் தெளிவு, பிழையில்லாமல் எழுதுதல், வயதுக்கேற்பக் கற்றல், கற்றலில் ஏற்படும் குறைகளைக் களைவதற்கான பணி ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு கதைகளை எழுதச் செய்தல் வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| முழுக் கதையை எழுத முயலுதல். (இருவரிக் கதைகளாக இருந்தாலும் நன்று.) | கற்பனையும் படைப்பாற்றலும் இருத்தல் | வண்ணங்களில் காட்சிப்படுத்துதல் | கதை மாந்தரை முழுமையாகக் காட்ட முயற்சி செய்தல் | கதையின் உண்மைத் தன்மையினைப் பொருள் பொருத்தமுற, தேவைக்கேற்பவும் வெளிப்படுத்துதல் |

### விருப்பம்போல் வரைதல் (Freehand Drawing)

கலைத்திறன் நுண்ணறிவை வெளிப்படுத்தும் வகையில் விருப்பம்போல் வரையும் செயல்பாடுகள் அமைதல் வேண்டும். கலைத்திறன் சார்ந்த பார்வை நூல்கள் வழங்கி கலைத்திறனை மேம்படுத்தலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| வரைதலில் மனத்தைச் செலுத்தல் | வேலையை முழுமையாக முடித்தல் | உரிய கருத்தையும் வடிவத்தையும் வெளிப்படுத்தல் | அழகியலை வெளிப்படுத்து வதாக அமைத்தல் (வண்ணப் பயன்பாடு, பிற) | பொருள்களைப் பயன்படுத்திவிட்டு, உரிய இடத்தில் வைத்தல் |

### படவிளக்கம் (Illustration)

படவிளக்கத்தின் மூலமாகக் கதை அல்லது பாடப்பொருளை வெளிப்படுத்திக் கலைத்திறன் நுண்ணறிவை மேம்படுத்தலாம். இதற்குக் கலைத்திறன் சார்ந்த பார்வை நூல்கள் வழங்கலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| படங்களைக் கருத்திற்கேற்பப் பொருத்தமானதாக அமைத்தல் | பணியை முழுமையாக முடித்தல் | உரிய கருத்தையும் வடிவத்தையும் வெளிப்படுத்தல் | அழகியலை வெளிப்படுத்தல் (வண்ணப் பயன்பாடு, பிற) | செயலை முடித்ததும் பொருள்களை உரிய இடத்தில் ஒழுங்காக வைத்தல் |

### அகவய வினாக்களுக்கு விடையளித்தல் (Open-ended Questions)

அகவய வினாக்களுக்கான விடைகள் ஒவ்வொருவரின் புரிதலுக்கேற்ப வேறுபடும். அகவய வினாக்களுக்கான விடைகளைக் குழந்தைகள் தனித்தன்மையுடனும் தெளிவாகவும் கூறுவர். குழந்தைகள் தெளிவாகவும் விளக்கமாகவும் எழுதவும் பேசவும் ஊக்கப்படுத்துதல் வேண்டும். அகவய வினாக்களுக்கான விடைகளைக் கண்டு, குறைதீர் கற்றலை மேற்கொள்ளலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| விடைகள், கேட்கப்பட்ட வினாக்களுக்குப் பொருத்தமாக இருத்தல் | விடைகள் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்தல் | விடைகள் எழுதும்போதும், கூறும்போதும் தெளிவு இருத்தல் | விடைகள் கருத்தாழமும் உண்மைத் தன்மையும் மாற்றுச் சிந்தனையும் அறிவை வெளிப்படுத்துவதாகவும் இருத்தல் | விடைகள் உண்மையாகவும் ஏற்புடையதாகவும் இருத்தல் |

### கருத்தாடல் (Debate)

கருத்தாடல்மூலம் அனைத்துவிதமான கருத்துகளையும் கேட்டு, எதிர்ப்பான கருத்துகளை மதித்து, அனைவரும் ஏற்றுக்கொள்ளும்வண்ணம் தன் கருத்துகளைத் தெரிவித்தல். பல பார்வை நூல்களைப் படிக்கச் செய்வதனால் கருத்தாடல் செய்யும் திறன் மேம்படும்.

| | | | | |
|---|---|---|---|---|
| தெளிவாகவும் சுருக்கமாகவும் குரல் ஏற்ற இறக்கத்துடன் தன் கருத்துகளை எடுத்துரைத்தல் | உற்றுக்கேட்டல், பிறர் கருத்துகளுக்கு விடையளித்தல் | முறையாகவும், தொடர்சிந்தனை யுடனும் தன் கருத்தை வெளிப் படுத்துதல் | உண்மையான கருத்துகளுக்கு வலிமை சேர்த்தல் | கேட்போரின் கவனத்தைத் தன்பால் ஈர்க்கும் ஆற்றல் |

**களப்பயண நிகழ்வுகளைப் பதிவு செய்தல் (Recording the Field-Trip)**

களப்பயணத்தில், மாணவன் தான் பார்த்தவற்றை, கற்றுக்கொண்டவற்றை முறையாக எழுதி ஒப்படைத்தல், தான் பெற்ற நேரடி அனுபவத்தைக் கலந்துரையாடச் செய்தல் வேண்டும். அவற்றிலுள்ள உண்மைகள், பன்முகத்தன்மைகளுக்கான காரணிகளை மதிப்பிடுதல் வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| குறிப்புகள், மாதிரிகள் திரட்டுதல் | கண்டறிந்தவற்றை வரிசைப்படுத்தி எழுதுதல் | கருத்துகளைத் தெளிவாக எழுதுதல் | இவ்வறிக்கையின் வாயிலாக ஈடுபாட்டையும் தனிச்சிந்தனையையும் அறிதல் | அறிக்கையை எழுதி உரிய வடிவில் ஒப்படைத்தல் |

**மாணவர் காட்சிப்படுத்துதல் (Student Presentation) –செய்தித்தொடர்பு தொழில்நுட்பம், விளக்கப்படம், கரும்பலகை (ICT, Chart, Black-Board)**

வகுப்பறையில் படங்கள், ஓவியங்கள், தொகுப்புப் படிவங்கள் முதலியவற்றை மாணவர்கள் காட்சிப்படுத்துதல் வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| தெளிவாகவும் முறைப்படியும் அமைத்தல் | கருத்துகள் நோக்கத்தை நிறைவேற்றுவதாக இருத்தல் | வண்ணம், எழுத்தளவு முதலியவற்றால் கவரும்வண்ணம் அமைத்தல் | கருத்துகளைச் சரியாகவும் போதுமான அளவிலும் காட்சிப்படுத்துதல் | முடிவுகளைக் காரண காரியத்தோடு வழங்குதல் |

**செய்திகளைத் திரட்டுதல் (Reference, Information Gathering)**

மாணவர்கள் பார்வையிட்டுச் செய்திகளைத் திரட்டும் ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையில் வினாக்களைக் கேட்டல் வேண்டும். திரட்டிய செய்திகளை வகைப்படுத்தும் திறனைச் சிறந்த வழிகாட்டுதல்மூலம் மேம்படுத்துதல் வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| இயற்கையாகவே முயற்சி மேற்கொள்ளுதல் | செய்திகளைத் தனித்தன்மையோடு திரட்டுதல் | செய்திகளைப் பொருத்தமாகப் பயன்படுத்துதல் | திரட்டிய செய்திகளைத் தெளிவாக உறுதிப்படுத்துதல் | திரட்டிய செய்திகளைக் காட்சிப்படுத்துதல் |

## அகரமுதலிச் செயல்கள் (Dictionary Work)

அகரமுதலியைப் பயன்படுத்தி சொற்களுக்குப் பொருள் அறிந்து அவற்றைச் சரியான முறையில் பயன்படுத்தும் திறனை வகுப்பறைச் செயல்பாடுகள்மூலம் வளர்த்தல் வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| எளிதாக அகரமுதலியைப் பயன்படுத்துதல் | சொல்லுக்குரிய பொருளைக் கண்டறியும் திறன் | சொல்லின் பொருளைப் புரிந்துகொள்ளுதல் | பொருளுக்கேற்பச் சொல்லைப் பயன்படுத்துதல் | சொற்களஞ்சியப் பெருக்கத்திற்கான ஆர்வம் |

## கலந்துரையாடல் (Discussion)

மாணவர்கள் சிறுகுழுவில் கலந்துரையாடும்போது, அவர்களுக்கிடையே கருத்துப் பரிமாற்றம் செய்யும் திறன், இடைவினையாற்றும் திறன் மேம்படுமாறு வாய்ப்புகளை ஏற்படுத்துதல் வேண்டும். ஆசிரியர்கள் உற்றுநோக்கி அல்லது குழுவுடன் கலந்துரையாடி நடுநிலைமையுடன் மதிப்பீடு செய்தல் வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| ஒவ்வொருவரும் தம் கருத்தை வெளிப்படுத்துதல் | ஒவ்வொருவரும் கூர்ந்து கவனித்தல் | குழுவில் ஒவ்வொருவரும் தம் கருத்தைப் பணிவுடன் பரிமாறிக்கொள்ளுதல் | குழுவிலுள்ள ஒவ்வொருவரும் கருத்துகளைப் புரிந்து பயன்பெறுதல் | கலந்துரையாடலில் நோக்கமும் பயனும் இருத்தல் |

## மனவரைபடம் (Mind-Mapping)

ஒவ்வொரு மாணவனும் தன் சிந்தனையில் தோன்றும் கருத்துகளைப் படம் வாயிலாக வெளிப்படுத்தும் முறையே மனவரைபடம் ஆகும். தனிமாணவனின் கற்றல் அடைவினை இம்முறைமூலம் மதிப்பீடு செய்யலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| மனவரைபடத்திற்கான வழிநெறிகளைப் பின்பற்றுதல் | பாடக்கருத்துகளையும் விளக்கங்களையும் பொருத்தமாகப் பயன்படுத்துதல் | தெளிவாக எடுத்துரைத்தல் | கற்றலை வெளிப்படுத்தும் வடிவமைப்பு | கற்றல் தொடர்புகளை வெளிப்படுத்துதல் |

## எழுத்தாற்றல் (Creative Writing)

மாணவர்களின் முழுத் திறமைகளை வெளிக்கொணரும் வகையில் எழுத்தாற்றலுக்கான வழிகாட்டுதல் இருத்தல் வேண்டும். தனி மாணவரின் திறமைகளை மேம்படுத்தும் வகையில் அமைதல் வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| தன்னாற்றலை வெளிப்படுத்துதல் | கருத்தை மையப்படுத்தி எழுதுதல் | மொழித்திறனை வெளிப்படுத்துல் | கருத்தைத் திறமையாக வெளிப்படுத்துதல் | நன்முறையிலும் தெளிவாகவும் வெளிப்படுத்துவதில் அக்கறை கொள்ளுதல் |

### நூலகப்படிப்பு/துணைப்பாட நூல்கள் (Library/Supplementary Reading)

படித்தல் என்பது, திறன்களில் இன்றியமையாததும் தேவையானதும் ஆகும். ஆகவே, நூலகம் சென்று படிப்பதற்கான ஆர்வத்தைத் தூண்ட ஊக்கப் பரிசுகளை வழங்கலாம்.

ஆசிரியர், குழந்தைகள் என்னென்ன நூல்களைப் படித்தனர் எனக் கேட்டறிந்து, அக்கருத்துகளை ஒவ்வொரு குழந்தைக்கும் கூறி, நூல்களைப் படிக்கத் தூண்டுதல் வேண்டும். அமைதியாகக் கற்க, வகுப்பறையில் கற்றல் மூலைகள் பெரும்பயன் தரும்.

| | | | | |
|---|---|---|---|---|
| படிக்கும் ஆர்வத்தை வெளிக்காட்டல் | ஈடுபாட்டுடனும் மையக் கருத்தை நோக்கியும் நூல்களைப் படித்தல் | தொடர்ந்து நல்ல நூல்களைத் தெரிவுசெய்தல் | எந்தெந்த நூல்களைப் படிக்கலாம் எனக் கலந்துரையாடல் | மாணவனின் ஆர்வத்தையும் விருப்பத்தையும் தூண்டுதல் |

### விடுகதைகள், புதிர்கள் (Riddles and Puzzles)

விடுகதைகள், புதிர்கள் மாணவர்களின் கூர்சிந்தனைத் திறனைத் தூண்டுவதாக அமைதல் வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| விடாமுயற்சியுடன் விடுவிக்கும் திறனைக் காட்டுதல் | பல்வேறுவகையான அணுகுமுறைகளை மாற்றுவழிகளில் முயற்சி செய்தல் | காரணகாரியச் சிந்தனை வெளிப்படுதல் | ஒன்றனோடு மற்றொன்றனைத் தொடர்புபடுத்திக் காணும் திறன் | பின்னர் வரும் முடிவுகளை ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை பெற்றிருத்தல் |

### சிக்கலுக்குத் தீர்வுகாணல் (Problem Solving)

குறிப்பிட்ட நிகழ்வுகள், சூழ்நிலைகளைக் கொடுத்து, அச்சூழலில் எவ்வாறு செயல்படுதல் வேண்டுமெனவும், அவற்றுக்கான தீர்வுகளைக் கேட்டறிதல் வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| பிரச்சினைகளைத் தெளிவாகப் புரிந்து கொள்ளுதல் | முறையாக அணுகுதல் | சிந்தித்து சிக்கலுக்கான தீர்வைக் காணல் | விடாமுயற்சியுடன் முயன்று முடித்தல் | பல்வேறு அணுகுமுறைகளில் முயற்சி செய்தல் |

### ஓவியம் வரைதல் (Drawing)

குழந்தைகள், அறிவுரைகளைப் பின்பற்றி வரைதல் வேண்டும். ஓவியம் வரைதலில் முயற்சி, நோக்கம், செம்மை ஆகியவற்றை மாணவரிடையே ஊக்குவித்தல் வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| தேவைகளை நிறைவு செய்தல்/வழிகாட்டுதல்களை முறையாகவும் செம்மையாகவும் செய்தல் | பணியை முழுமையாக முடித்தல் | செயல்பாட்டின் வாயிலாக முழுத்திறனைப் பெறும் திறன் | அழகுணர்ச்சியை வெளிப்படுத்தும் அறிவு (வண்ணப் பயன்பாடு, பிற) | பொருள்களைப் பொறுப்புடன் பயன்படுத்திவிட்டுத் திரும்பவும் உரிய இடத்தில் வைத்தல் |



www.kalvisolai.com

## வீட்டுப்பாடம் (Home-Work)

எந்த ஒரு வீட்டுப்பாடமும் மாணவனுக்குப் பயத்தையும் மனஅழுத்தத்தையும் குறைத்து ஊக்குவிப்பதாகவும் கற்றலில் முன்னேற்றம் அடையச் செய்வதாகவும் மனநிறைவைத் தரக்கூடியதாகவும் அப்பணியை நன்முறையில் முடிக்கத்தக்கதாகவும் இருத்தல் வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| தேவைகளை நிறைவேற்றுதல் | கொடுக்கப்பட்ட பாடங்களை முடித்தல் | பொருத்தமான பதில் அளித்தல் | வீட்டுப்பாடத்தைப் புரிந்து செய்வதற்கு ஏற்ப அமைதல் | அழகாகவும் தெளிவாகவும் காட்சி அளித்தல் |

**வளரறி மதிப்பீடு (ஆ) - FA (b)**

வளரறி மதிப்பீட்டுக்கான செயல்பாடுகளைப் பாடப்புத்தகத்தில் இருந்து அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். ஆசிரியர்கள் மற்றும் பள்ளிகளால் பரிந்துரைக்கப்பட்ட கற்றல் கற்பித்தல் சார்ந்த நூல்கள் இவற்றிலிருந்து வளரறி (ஆ) FA(b)க்கான செயல்பாடுகளை அமைத்து மதிப்பிடலாம்.

வளரறி மதிப்பீடு (ஆ)வுக்கான செயல்பாடுகள்:

- உண்மை / பொய்
- சரி / தவறு
- ஆம் / இல்லை
- பொருத்துதல்
- இரண்டுக்கு மேற்பட்ட விடைகளைப் பொருத்தும் முறை
- பலவுள் தெரிவு வினா
- பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்தல்
- கோடிட்ட இடங்களை நிரப்புதல்
- கருத்துகளை வரிசைப்படுத்துதல்
- செயல்பாடுகளை வரிசைப்படுத்துதல்
- சொல்வதை எழுதுதல்
- குறுகிய வினாவிற்கு விடையளித்தல்
- சிறு வினா விடை
- கட்டுரைப் படிவம் மற்றும் வரைபடத்தை நிரப்புதல்
- வினாடி வினா
- விடுகதை மற்றும் புதிர்கள்
- சிக்கலுக்குத் தீர்வு காணுதல்



www.kalvisolai.com

- பயன்படுத்துதல் மற்றும் சிந்தித்தல் செயல்பாடு
- திறன் சார்ந்து சிறப்பாக வரைதல்
- குறைதீர் கற்பித்தல்

இவற்றிலிருந்தெல்லாம் மாணவர் திறனைக் கண்டறிந்து மதிப்பீடு செய்யலாம்.

1. வளரறி மதிப்பீட்டை மதிப்பீடு செய்வதற்கான விளக்கக் குறிப்புகள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாணவனுக்கும் தனித்தனியான √ குறியீட்டைக் குறித்தல் வேண்டும். கற்பவரை மதிப்பீடு செய்வதற்காக, ஆசிரியருக்கு உதவும்வகையில் இக்குறியீடுகள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், ஒவ்வொரு மாணவனின் கற்றல் பட்டறிவைச் செறிவூட்டும்முறையில் உருவாக்கப்பட்டுள்ளன.

2. மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களுக்கும், இடையில் நின்று, மீண்டும் பள்ளிக்கு வருகை தந்த மாணவர்களுக்கும்கூட, மேலே குறிப்பிட்டுள்ள செயல்பாடுகளுக்கு இணையாகச் செயல்பாடுகளை உருவாக்கி மதிப்பிடலாம்.
3. ஒவ்வொரு மாணவனுக்கும் குறைந்தது நான்கு சிறு தேர்வுகளைக் கொடுத்தல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த இரண்டு சிறு தேர்வுகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்து மதிப்பெண் / தர நிலை வழங்குதல் வேண்டும்.

**வளரறி மதிப்பீடு (ஆ) - FA (b) பதிவுசெய்தல்**

- ❖ மாணவர்கள் தம்முடைய பாடப்புத்தகத்தில் உள்ள செயல்பதிவேட்டில் வளரறி (ஆ) FA (b) தேர்விற்கான செயல்பாட்டினைப் பதிவு செய்தல் வேண்டும்.
- ❖ மாணவர் முடித்த செயல்பாட்டிற்கான மதிப்பெண்களையும் தரநிலையையும் ஆசிரியர்கள் தம்முடைய, மதிப்பீட்டுத் தரநிலைப் பதிவேட்டில் பதிவு செய்தல் வேண்டும்.

  (ஒவ்வொரு பாடத்திற்கும் (Each subject) குறைந்தது நான்கு பதிவுகள் இருத்தல் வேண்டும்)

பல்வேறுபட்ட வளரறி மதிப்பீடு (ஆ) – FA (b) செயல்பாடுகள் குறித்த தெளிவாக அட்டவணை – **IV**இல் கொடுக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் கற்றல் பட்டறிவை உயர்த்திக்கொள்ளும்வகையில் ஆசிரியர்கள் உணர்வுடன் மதிப்பிட FA(b) செயல்பாடுகளை மதிப்பிடுவதில், மாணவர்கள் தம்மைத் தாமே தவறுகளைப் பகுப்பாய்ந்து மதிப்பிடும் முறையையும் சேர்த்தல் வேண்டும்.

வளரறி மதிப்பீடு (ஆ), வகுப்பறைச் செயல்பாடுகள் மாணவனைச் சென்றடைந்ததா என அறிய புறவயவினாக்கள் பெரிதும் உதவும்.



www.kalvisolai.com

## கல்விசார் செயல்பாடுகளுக்கான விளக்கக் குறிப்புகள்

### வளரறி மதிப்பீடு (ஆ) – FA(b)

**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள்**

**சிறுவிடைகள்**

- ❖ உரிய விடைகளை முழுமையாக எழுதுதல்
- ❖ குறித்த அளவில் விடைகளை எழுதுதல்
- ❖ கருத்துகளைத் தெளிவாக எழுதுதல்
- ❖ தேவையான இடங்களில் விவரங்களைச் சேர்த்தல்

**வரைகலை அமைப்புகள்** (Graphic Organiser)

- கருத்துகளைப் பொருத்தமாகத் தொடர்புபடுத்தும் திறன் பெற்றிருத்தல் ( கருத்துகளை நிரல்பட அமைத்தல்)
- படிவத்தைச் செம்மையாகவும் முழுமையாகவும் நிரப்புதல்

**தொகுத்தறி மதிப்பீட்டிற்கான (Summative Assessment - SA) வழிகாட்டு நெறிமுறைகள்**

1. ஒவ்வொரு பருவ இறுதியிலும் வினாத்தாள் திட்டவரைவின்படி தொகுத்தறி மதிப்பீடு நடைபெறும்.
2. எழுத்துத்தேர்வை அடிப்படையாகக் கொண்டு மாணவரின் மதிப்பெண்ணும் தர நிலையும் அமையும்.
3. வினாத்தாள் திட்ட வடிவமைப்பில் உள்ள அறிதல், புரிதல், பொருளறிதல், பயன்படுத்துதல், பகுத்தாய்தல், மதிப்பிடுதல், படைப்பாற்றல் ஆகியவற்றின் அடிப்படையில் இம்மதிப்பீடு அமையும். மேலும், ஒவ்வொரு பருவத்திற்கும் உரிய பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு இம்மதிப்பீடு அமையும்.
4. இம்மதிப்பீட்டிற்கான வினாக்கள் பாடப்புத்தகத்தின் இறுதியில் உள்ள வினாக்கள் மட்டும் அன்றி, பாடங்களின் இடையில் உள்ள செயல்பாடுகள் மற்றும் பயிற்சிகள் போன்றவற்றிலிருந்தும் கேட்டல் வேண்டும்.

### அட்டவணை – IV

### பருவ இறுதித் தரநிலை அட்டவணை

| வளரறி மதிப்பீடு (FA) 40 | | தொகுத்தறி மதிப்பீடு(SA) 60 | | மொத்தம் FA+SA 40 + 60 = 100 | |
|---|---|---|---|---|---|
| மதிப்பெண் | தரநிலை | மதிப்பெண் | தரநிலை | மதிப்பெண் | தரநிலை |
| 37–40 | A1 | 55–60 | A1 | 91–100 | A1 |
| 33–36 | A2 | 49–54 | A2 | 81–90 | A2 |
| 29–32 | B1 | 43–48 | B1 | 71–80 | B1 |
| 25–28 | B2 | 37–42 | B2 | 61–70 | B2 |
| 21–24 | C1 | 31–36 | C1 | 51–60 | C1 |
| 17–20 | C2 | 25–30 | C2 | 41-50 | C2 |
| 13–16 | D | 19–24 | D | 33-40 | D |
| 9–12 | E1 | 13–18 | E1 | 21-32 | E1 |
| 8 & 8– க்கு கீழே | E2 | 12 & 12–க்கு கீழே | E2 | 20 & 20 –க்கு கீழே | E2 |



www.kalvisolai.com

# 3. கல்வி இணைச் செயல்பாட்டுப் பகுதிகள்

**தரப்படுத்தப்பட்ட அளவைகள் மற்றும் மதிப்பீடு**

ஒவ்வொரு மாணவனையும் கீழ்க்காணும் பகுதிகளில் தரப்படுத்தப்பட்ட அளவைகளைக் கொண்டு மதிப்பீடு செய்தல் வேண்டும்.

1. வாழ்க்கைத்திறன்கள்
2. மனப்பான்மைகளும், மதிப்புகளும்
3. நன்னலம், யோகா, முழு உடற்பயிற்சி
4. பாட இணைச் செயல்பாடுகள்

வாழ்க்கைத் திறன்கள் & மனப்பான்மைகள் மற்றும் மதிப்புகள் ஆகியவற்றின்கீழ் கொடுக்கப்பட்டுள்ள திறன்களை மதிப்பீடு செய்து, தரம் வழங்குவதற்கான விளக்கக் குறியீடுகள் அட்டவணை V, மற்றும் VII இல் கொடுக்கப்பட்டன.

நன்னலம், யோகா, முழு உடற்பயிற்சி போன்றவற்றை மதிப்பீடு செய்து, தரம் வழங்குவதற்கான வடிவமைப்பு இதற்கெனத் தனிக் கையேட்டில் கொடுக்கப்பட உள்ளது.

கல்வி இணைச் செயல்பாடுகளை மதிப்பீடு செய்வதற்கான ஐந்து நிலைத் தரப்புள்ளிகள் அட்டவணை VIஇல் கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கான தரங்களும், கருத்துக் குறிப்புகளும் மதிப்பெண் மற்றும் தரப் பதிவேட்டிலும், மாணவர் திரள் பதிவேட்டிலும் பதிவு செய்தல் வேண்டும்.

**மதிப்பீட்டிற்கான செயல்முறை**

கல்வி இணைச் செயல்பாடுகள் அனைத்தையும் மதிப்பிடச் சிறந்த வழிமுறை உற்றுநோக்கல் ஆகும். ஏதேனும் ஒரு சூழலில் உற்றுநோக்கியவற்றை மட்டுமே கொண்டு மதிப்பீடு செய்யாமல், பருவம் முழுவதும் தொடர்ந்து உற்றுநோக்கி மதிப்பிடுதல் வேண்டும். மாணவர்கள் விளையாடும்போதும் குழுவில் செயல்படும்போதும் வகுப்பறை இடைவினையின் போதும் உற்றுநோக்கி மதிப்பிடலாம். மாணவர்கள் கல்வி மற்றும் பிற செயல்பாடுகளில் அடையும் வெற்றி, தோல்விகளைக் கையாளும் முறையினையும் (கல்வி செயல்பாடுகள், பிற செயல்பாடுகள்) உற்றுநோக்கி மதிப்பிடுதல் வேண்டும்.

**1. வாழ்க்கைத்திறன்கள்**

ஒருவரின் உடல், உள்ளம், உணர்வு ஆகியவற்றை நலமாக வைத்துக் கொள்ள உதவும் திறன்களே வாழ்க்கைத் திறன்கள் ஆகும்.

உலக நல நிறுவனம் (WHO) வாழ்க்கைத்திறன்களைப் பற்றிப் பின்வருமாறு விளக்குகிறது. "அன்றாட வாழ்க்கை நிகழ்வுகளையும், தேவைகளையும் ஒவ்வொருவரும் திறமையாக எதிர்கொள்ளுவதற்கு நேர்மறையான சிந்தனைகளையும் நடத்தைகளையும் பெற்றிருத்தல் இன்றியமையாதது. இதன் பொருளாவது, குழந்தைகள் சமுதாய உளவியல் திறன்களையும் உள்ளார்ந்த திறன்களையும் வளர்த்துக் கொள்ளுதல் ஆகும்.

மாணவனிடம் பொதிந்துள்ள வாழ்க்கைத்திறன்களை மதிப்பிட்டு வெளிக்கொணர்வது இன்றியமையாததும் தேவையானதும் ஆகும். வாழ்க்கைத்திறனில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளை மதிப்பீட்டு அளவில் குறிக்கும்போது, அந்தந்த வாழ்க்கைத்திறன்களின் உட்கூறுகளுக்கு (அட்டவணை – VII) அளிக்கப்பட்டுள்ள விளக்கக் குறியீடுகளைப் பயன்படுத்தி, ஐந்து குறியீட்டுத் தரநிலை அளவில் (A, B, C, D, E) அட்டவணை – IIஇல் மதிப்பிடுதல் வேண்டும். ஆசிரியர் கையேட்டில் கல்வி இணைச் செயல்பாடுகளுக்கான விரிவான மதிப்பீட்டுக் குறியீடுகள் தரப்பட்டுள்ளன. ஓராண்டிற்கு மும்முறை மாணவர்களுக்குத் தரநிலைகள் தரப்படும்.

பள்ளிகளில் குழந்தைகளுக்கு வாழ்க்கைத்திறன்களை வளர்த்தல் இன்றியமையாதது. அப்பொழுதுதான், குழந்தை உடலாலும் / உள்ளத்தாலும் நன்முறையில் கல்வி கற்று முழு மனிதனாக வளரும். குழந்தைகளின் முக்கிய வாழ்க்கைத்திறன்களாகத் தெரிவு செய்யப்பட்டவை:

- தன்னை அறிதல்
- துணிந்துரைத்தல் & மறுக்கும் திறன்கள்
- பகுத்தறியும் திறன்கள்
- சிறப்பாகத் தொடர்புகொள்ளும் திறன்கள்
- குழுச் செயல்கள்

**2. மனப்பான்மைகளும் மதிப்புகளும்**

மனப்பான்மைகளும் மதிப்புகளும் ஒரு குழந்தை தான்விரும்பும் வாழ்க்கையின் தரத்தை நிருணயம் செய்யும் அளவீடுகளாகும். சில மதிப்புகள் உள்ளார்ந்தவை. அவை ஓர் ஆசிரியரால் தூண்டிவிடப்படலாம். பிற மதிப்புகள் முன்னுதாரணங்களைக் காட்டியே வளர்க்கப்படுகின்றன. இவை குழந்தையின் புரிதல் மற்றும் அவற்றின் முக்கியத்துவத்தைப் பொருத்தே அமைகின்றன. இந்த மனப்பான்மைகளும் மதிப்புகளும் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளன. முழுமையான கற்றல், சமூகக் கொள்கைகளான இணக்கமான ஒப்புரவு, சமுதாய நிலை, மரியாதை மற்றும் சகிப்புத்தன்மை போன்றவற்றால் சாத்தியமாகிறது. இப்பண்புகளில் சிலவற்றை நாம் மதிப்பீடு செய்யலாம். பிற பண்புகள் (எடுத்துக்காட்டாக



www.kalvisolai.com

நேர்மையாக நடந்துகொள்ளுதல், ஒழுக்கமாக இருத்தல் மற்றும் சமூகக்கேடுகளை எதிர்க்கும் பண்புகள் போன்றவை) உள்ளார்ந்தவை ஆகும்

**உயர்தொடக்க வகுப்பில், தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டின் வடிவமைப்பு கீழ்க்காணும் பரிமாணங்களை உள்ளடக்கியுள்ளது:**

- ❖ தேசிய மற்றும் மாநில அரசு சார்பான சின்னங்களுக்கு மரியாதை செலுத்துதல்
- ❖ பாராட்டத்தக்க பண்புடைமை
- ❖ பிற உயிர்களிடத்தில் அன்பு காட்டுதல்
- ❖ அரசியலமைப்புச் சட்ட விதிகளைப் பின்பற்றுதல்
- ❖ பள்ளி மற்றும் சமூகத்தில் உள்ள பொதுச்சொத்துகளைப் பாதுகாத்தல்
- ❖ சுற்றுச்சூழலின் முக்கியத்துவத்தை உணர்தல்
- ❖ பல்வேறுபட்ட சமூகத்தினரின் பண்பாடுகள், வாழ்க்கைமுறைகள் போன்றவற்றை மதித்து ஏற்றுக்கொள்ளுதல்.
- ❖ எல்லாவற்றிலும் தம்மைச் சிறப்பாக்கிக்கொள்ளுதல்.
- ❖ சாலைவிதிகள் மற்றும் பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடித்தல்.

**3. நன்னலம், யோகா, முழு உடற்பயிற்சி**

நன்னலம், யோகா, முழு உடற்பயிற்சி குறித்துப் பாடப்புத்தகத்தில் கொடுக்கப்பட்ட செயல்களுக்கான அட்டவணையை ஆசிரியர்கள் கவனமாகப் பின்பற்றுதல் வேண்டும். ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள உடல் நலக்கல்விப் புத்தகத்தில் உள்ள செயல்பாடுகளை உன்னிப்பாகப் பின்பற்றுதல் வேண்டும். யோகா, உடற்பயிற்சி ஆகியவற்றை நாள்தோறும் குறித்த நேரத்தில் செய்து பழகுதல் வேண்டும்.

**4. பாட இணைச் செயல்பாடுகள்**

பாட இணைச்செயல்பாடுகள் ஒவ்வொரு குழந்தையின் திறமைகள், அவர்களுக்கு ஆர்வமூட்டக்கூடிய செய்திகள் என இவற்றைச் சுற்றியே உருவாக்கப்படுகின்றன.

பாட இணைச் செயல்பாடுகளை மதிப்பிடுவதற்கான விளக்கக் குறியீடுகள் அட்டவணை **I**இல் கொடுக்கப்பட்டுள்ளன.



www.kalvisolai.com

## அட்டவணை – V

| பாட இணைச் செயல்பாடுகளுக்கான விளக்கக் குறியீடுகள் | | | | |
|---|---|---|---|---|
| முயற்சி | விடாமுயற்சி | தொடங்காற்றல் | ஈடுபாடு | ஒழுங்குமுறை |

கொடுக்கப்பட்டுள்ள இரு தெரிவுகளிலிருந்து ஏதேனும் ஒரு செயல்பாட்டை 5 குறியீடு A, B, C, D, E அளவீடு மூலம் மதிப்பீடு செய்து தர நிருணயம் செய்தல் வேண்டும். பாட இணைச் செயல்பாடுகளை எவ்வாறு மதிப்பீடு செய்ய வேண்டும் என்பது பற்றிய விளக்கம் ஆசிரியர் கையேட்டில் வழங்கப்பட்டுள்ளது. மாணவருக்கு ஆண்டில் மும்முறை தர அறிக்கை வழங்கப்படும். பாட இணை ஆக்கக் கூறுகளுள் ஏதேனும் ஒன்றனைக் கொண்டு மாணவர்களை மதிப்பீடு செய்யலாம்.

i) நாட்டுப்புறக்கலைகள்

ii) மரபு விளையாட்டுகள்

iii) மன்றச் செயல்பாடுகள்

**நாட்டுப்புறக் கலைகள்**

(எ.கா) கரகம், தப்பாட்டம், கும்மி, கோலாட்டம், கூத்து முதலியன.

**மரபுசார்ந்த விளையாட்டுகள்**

(எ.கா) கோ... கோ..., கபாடி முதலியன.

**மன்றச் செயல்பாடுகள்**

- ❖ இலக்கியத் திறன்கள் (இலக்கிய மன்றச் செயல்பாடுகள்)
- ❖ அறிவியல் திறன்கள் (அறிவியல் மன்றச் செயல்பாடுகள்)
- ❖ சமூக மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த திறன்கள் (சுற்றுச்சூழல் மன்றங்கள்)
- ❖ சாரணர் & சாரணியர், தேசிய பசுமைப்படை, செஞ்சுருள் சங்கம், நாட்டுநலப் பணித் திட்டம் முதலியன.

**ஒரு குழந்தையின் தனித்திறமைகளை இனங்கண்டும் பாராட்டியும் திறன் பதிவேட்டில் குறிப்பிடுதல் வேண்டும்.**

நார்ப்பொருள்கள், பனைப்பொருள்கள் செய்தல், தையல் வேலைகள் (எம்பிராய்டரி, தையல், மணிகள் கொண்டு பொருள்கள் செய்தல்), பொம்மைகள் செய்தல், இசைக்கருவிகள் வாசித்தல், மூலிகைகள் பற்றிய அறிவு, ரங்கோலி முதலியவை மாணவர்களின் தனித்திறமைகளுள் அடங்கும்.



www.kalvisolai.com

## அட்டவணை – VI

### கல்வி இணைச் செயல்பாடுகளுக்கான ஐந்து நிலைத் தரப்புள்ளிகள்

| தரநிலை | தரப்புள்ளி | தர விளக்கம் |
|---|---|---|
| A | 5 | சிறப்பு நிலை (ஐந்து தரக் குறியீடுகளையும் பெற்றவர்) |
| B | 4 | மிக நன்று (நான்கு தரக் குறியீடுகளை மட்டும் பெற்றவர்) |
| C | 3 | நன்று (மூன்று தரக் குறியீடுகளை மட்டும் பெற்றவர்) |
| D | 2 | திருப்திகரம் (இரண்டு தரக் குறியீடுகளை மட்டும் பெற்றவர்) |
| E | 1 | முயற்சி தேவை (ஒரு தரக் குறியீட்டினை மட்டும் பெற்றவர்) |

**கல்வி இணைச் செயல்பாடுகளுக்கான தரநிலை மதிப்பிடுதல் மற்றும் பதிவு செய்யும் முறைகள் (பருவ வாரியாக)**

ஒவ்வொரு கல்வி இணைச்செயல்பாடுகளையும் அனைத்துப் பாட ஆசிரியர்கள் மதிப்பீடு செய்வதுடன், ஒவ்வொரு பருவ இறுதியிலும் வகுப்பாசிரியர் அனைத்துப் பாட ஆசிரியர்களையும் கலந்தாலோசித்து அனைத்துக் கல்வி இணைச்செயல்பாடுகளுக்கான தரநிலையை வழங்குதல் வேண்டும்.

ஆண்டிறுதித் தொகுப்புத் தரநிலையினை மூன்று பருவத்திலும் அம்மாணவர் பெற்ற தரநிலைக்கேற்ற தரப்புள்ளிகளின் சராசரியினைக் கண்டுபிடித்து அட்டவணை –VIIஇல் கண்டுள்ளவாறு ஒவ்வொரு கல்வி இணைச்செயல்பாட்டிற்கும் வழங்குதல் வேண்டும்.

## அட்டவணை – VII

### கல்வி இணைச் செயல்பாட்டிற்கான தொகுப்புத் தரநிலை

| சராசரித் தரப்புள்ளி | தரநிலை |
|---|---|
| 4.5 – 5 | A |
| 3.5 – 4.4 | B |
| 2.5 – 3.4 | C |
| 1.5 – 2.4 | D |
| 1 – 1.4 | E |



www.kalvisolai.com

இந்த அடிப்படையில் கல்விசார் பகுதியில் உள்ள உடற்கல்விப் பாடத்திற்கும் ஆண்டிறுதித் தொகுப்புத் தரநிலையைக் கணக்கிட்டு வழங்குதல் வேண்டும்.

பள்ளியில் மாணவர் பெறும் அனைத்துவிதமான கற்றல் அனுபவங்களும் வாழ்க்கைத்திறன், சரியான மனப்பான்மை & மதிப்புகள், நன்னலம், பாடஇணைச் செயல்பாடுகள் போன்றவற்றை ஏற்படுத்தி வலுப்படுத்துவதாக அமைதல் வேண்டும் எனப் பல்வேறு கல்விக் குழுக்கள் பரிந்துரை செய்துள்ளன. இதன் காரணமாகக் கல்வி இணைச் செயல்பாடுகளுக்கான மதிப்பீட்டுப் பகுதிகள் அனைத்துப் பாடக் கற்றலுடன் பலவகைகளிலும் உள்ளடங்கியுள்ளது.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி வகுப்பறையில் ஒவ்வொரு பாட ஆசிரியரும் கல்வி இணைச் செயல்பாட்டுத் திறன்களையும், அடைவுகளையும் மதிப்பீடு செய்யலாம். பொருத்தமான விவரங்களை மதிப்பீட்டுப் பதிவேடுகளில் குறித்துக் கொள்ளுதல் வேண்டும். ஒவ்வொரு பருவ இறுதியிலும் வகுப்பாசிரியர் அனைத்துப் பாட ஆசிரியர்களுடன் கலந்துரையாடி, அதனடிப்படையில் மாணவர்களுக்குத் தரநிலைகளை வழங்குதல் வேண்டும். இத்தரநிலைகள் மதிப்பெண் மற்றும் தரநிலைப் பதிவேட்டில் பதிவு செய்தல் வேண்டும்.

ஆசிரியர் கீழுள்ள விளக்கக் குறியீடுகளைக் கொண்டு மதிப்பீடு செய்தல் வேண்டும்.

**அட்டவணை – VIII**

**கல்வி இணைச்செயல்பாடுகளில் உள்ள உட்கூறுகளுக்கான விளக்கக் குறியீடுகள்**

**1. வாழ்க்கைத்திறன்கள்**

| **தன்னை அறிதல்** | | | | |
|---|---|---|---|---|
| தன்னம்பிக்கை, தொடங்காற்றல் | மதித்தல், மரியாதை தருதல் | தன்திறமை, குறைகளை அறிந்திருத்தல் | சூழலுக்கேற்பவும் நேர்மறையாகவும் முடிவெடுத்தல் | சுய முடிவு எடுத்தல் மற்றும் தெரிவித்தல் |

| **துணிந்துரைத்தல் / மறுத்தல்திறன்** | | | | |
|---|---|---|---|---|
| தேவையற்ற செயல்களில் தன்னைக்கட்டுப்படுத்தும் ஆற்றல் | பிறரிடத்தில் தன்னை நிலை நாட்டல் | தீச்செயல் தீயநோக்குடன் தொடுதலை எதிர்த்தல் | ஒத்த வயதுடையவர்களுடன் உறுதியாகவும் இணக்கத்துடனும் இருத்தல் | புதியவர்களுடன் எச்சரிக்கையுடன் இருத்தல் காலமறிந்த தேவைக்கு மட்டும் உதவி பெறுதல். |

| **பகுத்தறியும் திறன்** | | | | |
|---|---|---|---|---|
| குறிக்கோளும் திறமையும் வெளிப்படும் | காரண காரிய தொடர்புடைய சிந்தனை | இடர்ப்பாடான சூழலிலும் வளமார்ந்த சிந்தனை | கட்டுப்பாட்டுடன் கூடிய செயல்பாடு | தோல்வியை வெற்றிப்படிகளாக மாற்றும் சிந்தனைத் திறன். |

| செய்தி வெளிப்பாட்டுத் திறன் | | | | |
|---|---|---|---|---|
| குறிக்கோளை நோக்கிய தெளிவு | உற்றுக் கேட்பவர் | குற்றம் பாராது கருத்துகளைப் பகிர்ந்து கொள்பவர், மீள்கருத்துகளை ஏற்பவர் | வற்புறுத்தாத மனவுறுதியாளர் | தேவையான உரிய உடலசைவுகளைப் பயன்படுத்துபவர். |

| குழுப்பணி | | | | |
|---|---|---|---|---|
| குழுவில் முன்னின்று பணியாற்றுபவர் | பிறர் கருத்துக்கு மதிப்பளிப்பவர் | தொடங்காற்றல் உடையவர் | பொறுப்புமிக்கவர் | குழுவினர் கூறும் மீள் கருத்துகளையும் திறனாய்வுக் கருத்துகளையும் நேர்மறையாக எடுத்துக் கொள்பவர். |

## 2. மனப்பான்மைகளும் மதிப்புகளும்

| தேசிய மற்றும் மாநில அரசு சார்பான சின்னங்களுக்கு மரியாதை செலுத்தல் | | | | |
|---|---|---|---|---|
| தேசிய மற்றும் மாநில அரசு சார்பான சின்னங்களை அறிதல் | பொருளையும் தனிச்சிறப்பையும் புரிந்து கொள்ளுதல் | விடுதலைத் திருநாள், குடியரசு நாள், கொடியேற்றங்களில் கலந்துகொள்ளுதல் | ஒழுங்குடனும், மகிழ்ச்சியுடன் தமிழ்த்தாய் வாழ்த்தையும் நாட்டுப் பண்ணையும் பாடுதல். | இந்தியன் என்னும் உணர்வு வெளிப்படுமாறு நடந்துகொள்ளல். |
| **பாராட்டத்தக்க பண்புடைமை** | | | | |
| எப்பொழுதும் பொருத்தமான பண்புகளையே வெளிப்படுத்துதல் | சொல்லிலும் செயலிலும் அனைவருக்கும் மதிப்பளித்தல் | நண்பர்களுக்கு உதவுபவராகவும் அவர்களின் மனத்திற்கினியவராகவும் இருத்தல் | சமூக நன்னடத்தையினை வகுப்பிலும் வெளியிடங்களிலும் வெளிப்படுத்துதல் | சினங்கொள்ளும் நிலையிலும் பண்பு நிலையிலிருந்து தவிராமல் இருத்தல் |

| பள்ளி மற்றும் சமூகத்தில் உள்ள பொதுச் சொத்துகளைப் பாதுகாத்தல் | | | | |
|---|---|---|---|---|
| பள்ளியின் தளவாடப் பொருள்களையும் சுவர்களையும் சிதைக்காமல் இருத்தல் | மனம்போன போக்கில் வன்முறையில் ஈடுபடாமலும் பள்ளியின் சொத்துகளைப் பாழ்படுத்தாமலும் இருத்தல் | மின்சாரக் கருவிகளைத் தேவைப்படும்பொழுது மட்டும் பயன்படுத்துதல் | பிறரால் ஏற்படும் கலைப் பண்பாட்டுச் சீரழிவுகளைத் தடுத்தல் | பொதுச் சொத்துகளைப் பாதுகாப்பதில் பங்கேற்றல் |

| பிற உயிர்களிடத்தில் அன்பு காட்டுதல் | | | | |
|---|---|---|---|---|
| மகிழ்ச்சியுடனும் நேர்மறைச் சிந்தனையுடனும் இருத்தல் | அடுத்தவருக்கு முன்வந்து தாமாக விட்டுக் கொடுத்து உதவுதல் | தாவரங்களையும் மரங்களையும் பாதுகாத்து வளர்க்க முன்வருதல் | எம்முறையிலும் விலங்குகளை உயிர்களைத் துன்புறுத்தாத பண்புடன் இருத்தல் | துன்புறுத்தும்முன் மற்ற உயிர்களின் நிலையில் இருந்து பார்த்தல் |

| சாலை விதிகள் மற்றும் பாதுகாப்பைக் கடைப்பிடித்தல் | | | | |
|---|---|---|---|---|
| சாலை விதிகளை விழிப்புடன் பின்பற்றல் | விளையாட்டுத் திடலில் பாதுகாப்பு விதிகளைக் கடைப்பிடித்தல் | மின்பொருள்கள் மின்மாற்றிகளில் கை வைக்காதிருத்தல் | சமையலறைச் சாதனங்களைப் பாதுகாப்புடன் கையாளுதல் | நீர்நிலைகளில் போதிய முன்னெச்சரிக்கையுடன் இருத்தல் |

| சுற்றுச்சூழல் மதிப்புகள் | | | | |
|---|---|---|---|---|
| பயன்பாட்டைக் குறைத்தல், மறு பயன்பாடு மற்றும் மறு சுழற்சி பற்றி அறிந்திருத்தல். | உயிர்களின் பலதரப்பட்ட வகைகளையும், அவற்றைப் புவியில் பாதுகாக்க வேண்டிய அவசியத்தையும் புரிந்து நடந்து கொள்ளுதல் | சுற்றுப்புற மாசினால் விளையும் தீமைகளை அறிந்திருத்தல் | சுற்றுப்புறத்தைப் பாதுகாக்க பள்ளி மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் முழுமையாகப் பங்கேற்றல் | சுற்றுப்புறச் சூழல் சார்ந்த செய்திகளைப் பரப்பத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் |

| சிறப்பு நிலை நோக்கி முன்னேறுதல் | | | | |
|---|---|---|---|---|
| அடையத்தக்க இலக்குகளை நிருணயித்தல் | ஒருவரது பலம் மற்றும் பலவீனம் குறித்து அறிதல் | மிகவும் உணர்வு பூர்வமாகவும் சக்தியுடனும் பணிகளில் ஈடுபடுதல் | தடைகளைத் துணிச்சலோடு தாண்டி வெற்றி பெறுதல் | பின்னூட்டத்தை நேர்மறையாக ஏற்று முன்னேற முயற்சித்தல் |

| இந்திய அரசியலமைப்புச் சட்டங்களை நிலைநிறுத்துதல் | | | | |
|---|---|---|---|---|
| நமது அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரையில் விளக்கப்பட்டுள்ள அடிப்படை மனித உரிமைகள் மற்றும் கடமைகளைப் பற்றி முழுமையாக அறிதல் | குழந்தைகளின் சிறப்பு உரிமைகள் பற்றி அறிதல் | வகுப்பறையில் மாணவர் தமக்குள் உள்ள வேறுபாடுகளை பொறுத்துக் கொள்ளும் சூழலை உருவாக்குதல் | மிகவும் விழிப்போடு இருந்து சாதி, சமய, மத வேறுபாடுகள், பாலின, மத, மொழிப் பிரிவினையைத் தூண்டுவோரைத் தலைதூக்காமல் பாாத்துக் கொள்ளுதல் | தமது சுற்றுப்புறத்தில் அமைதியும் சுமுகமான சூழல் நிலவச் செய்ய முயற்சி செய்தல் |

| பண்பாட்டுப் பன்முகத் தன்மையை மதித்தல் | | | | |
|---|---|---|---|---|
| இந்தியப் பண்பாட்டில், சமூக வழக்குகளிலும் நிலவும் வளமான வேற்றுமைகளை அறிதல் | பிற மத, மொழி சிறுபான்மையினர்களிடம் மரியாதை காட்டுதல் | வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களைப் பார்வையிடுவதில் ஆர்வம் காட்டுதல் | கைவினைப் பொருள்கள் செய்வதில் ஆர்வம் காட்டுதல் | பண்பாட்டு நிகழ்ச்சிகளில் துடிப்போடு பங்கு கொள்ளுதல் |



www.kalvisolai.com

## 4. மாற்றுத்திறனாளிகளுக்கான மாற்றுமுறை மதிப்பீடு

கலைத்திட்டம் என்பது ஒருவரைப் புரிந்துகொள்ளுதல், பயன்பெறும் வகையில் அதனை உலகத்தோடு தொடர்புபடுத்துதல் என மாணவர்களை வாழ்க்கைக்கு ஆயத்தப்படுத்துதல் ஆகும்.

கல்வியின் நோக்கத்தில், மாற்றுத்திறன்கொண்ட குழந்தைகளும் முடிந்தளவு கலைத்திட்ட வரையறைக்குள் வருகின்றனர். குழந்தைகள் அறிவுபெறுவதற்குப் பல்வேறு வாய்ப்புகள் உள்ளன. மேலும், இதற்கு எவ்வித எல்லையும் நிருணயிக்கப்படவில்லை. குறிப்பிட்ட குழந்தைகளின் கற்றலை, அதில் உள்ள குறைபாடுகளின் அடிப்படையில் கருத்தில் கொள்வதில்லை. குறைபாடுகளின் அளவைப் பொருத்து அனைத்துக் குழந்தைகளும் வகுப்பில் ஒரே கலைத்திட்டத்தின்கீழ் அவரவர் கற்கும் திறனுக்கேற்பக் கற்கின்றனர்.

- மாற்றுத்திறனாளியரான ஒவ்வொரு குழந்தைக்கும் தனித்தன்மை வாய்ந்த கல்வித் திட்டம் வழங்குதல் வேண்டும்.
- தனித்தன்மை வாய்ந்த கல்வித்திட்டம் மாற்றுத்திறனுள்ள குழந்தை எதனை, எவ்வாறு, எவ்வளவு பாடப்பகுதியைக் கற்க வேண்டும் என்பதனைக் கூறுதல் வேண்டும்.
- மதிப்பீடு தனித்தன்மை வாய்ந்த கல்வித்திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கும்.
- தனித்துவக் கல்வித்திட்டம் பற்றிய குறிப்பு ஆசிரியர்களுக்கு வழங்கப்படும்.

**தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டின் ஓர் அங்கமாகக் கீழ்க்காண் பதிவேடுகள் மதிப்பீடு செய்ய ஏதுவாக வழங்கப்பட்டுள்ளன.**

அ) மாற்றுத்திறனுள்ள குழந்தைகளுக்கு வளரறி மற்றும் தொகுத்தறி மதிப்பீடு செய்வதற்கான வழிமுறைக் கையேடு

ஆ) மாற்றுவழி மதிப்பீட்டுச் (Alternative Assessment) செயல்பாட்டுப் பட்டியலை மதிப்பெண் / தர அளவீட்டுப் பட்டியலுடன் இணைத்தல்

இ) மதிப்பெண் மற்றும் தர அளவீட்டுப் பதிவேட்டில் கீழ்க்காண்பவை இடம் பெற்றிருக்கும் பொது மதிப்பீடு/மாற்றுவழி மதிப்பீடு

**மாற்றுத்திறன்மிக்க குழந்தைகளை மதிப்பீடு செய்வதற்கான வழிமுறைகள்**

**I. செவித்திறன் குறைபாடு உடையோர்**

செவித்திறன் குறைபாடுடைய குழந்தைகள், பேசுவோர் சொல்வதனைக் கவனித்தலில் சந்திக்கும் பிரச்சினைகளோடு பேசுவதில் தெளிவின்மை மற்றும் சரளமாகப் பேச இயலாமை முதலிய பிரச்சினைகளால் துன்புறலாம்.

செயல்படுத்துவதற்கான நெறிமுறைகள்

- குழந்தை மருத்துவரால் பரிந்துரைக்கப்பட்ட காதுகேட்கும் கருவியைப் பொருத்தி இருப்பதனை உறுதி செய்தல்.
- மதிப்பீடு குறித்துக் குழந்தைக்கு வழங்கப்படும் செய்தி/கருத்து, குழந்தையால் புரிந்து கொள்ளப்பட்டதா என்பதனை ஆசிரியர் உறுதிசெய்தல் வேண்டும். ஆசிரியர் இம்மாணவர்களுக்குச் சில சைகைகள் வாயிலாகப் புரியவைத்தல் வேண்டும். (முகக்குறிப்பு, இயற்கையான சைகைகள், பொருள்கள், படங்கள் அல்லது அச்சிட்ட தாள்கள்மூலம் புரிய வைத்தல் )
- மாற்றுத்திறனுள்ள குழந்தைகளுக்கான செயல்பாடுகளை வழங்குவதற்குமுன் அவர்களின் கவனத்தை ஆசிரியர் ஈர்த்தல் வேண்டும்.
- ஆசிரியர் பேசும்போது அவரின் முகத்தை மாற்றுத்திறனுள்ள குழந்தை நேரடியாகப் பார்ப்பதனை உறுதி செய்தல் வேண்டும். ஆசிரியரின் வாய் / முகம் மாற்றுத்திறனாளிக்கு முழுமையாகத் தெரிதல் வேண்டும்.
- ஆசிரியர் கற்பித்துக்கொண்டிருக்கும்பொழுது, மாணவர் எழுதும் செயல்பாட்டினைத் தவிர்த்தல் வேண்டும். ஏனெனில், இச்செயலினால் மாணவரின் கவனம் சிதறும்.
- மாற்றுத்திறன் குழந்தையை ஆசிரியருக்கு அருகிலேயே (1–2 மீட்டர் தூரத்தில்) அமரச் செய்தால், அவர்கள் சைகை மொழியினைக் கவனிக்கவும், எளிமையாகப் பேசுவதற்கும் வாய்ப்பாக அமையும்.
- கேட்டல், பேசுதல், சொல்லாட்சித்திறன் முதலியவற்றில் சிக்கல் உள்ளதனால், மதிப்பீடு செய்ய ஆசிரியருக்கு மிகுதியான காலம் தேவைப்படும்.

**வளரறி மதிப்பீடு (அ)**

**உதவி தேவைப்படும் பகுதிகள் –** கவனித்தல், பேசுதல் செயல்பாடுகள்

**மதிப்பீட்டிற்கான பொது வழிமுறைகள்**

- கவனிப்பதற்கு ஏற்ற பொதுநெறிமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.
- பேசும்போது குழந்தை, படங்களையோ பொருள்களையோ முகபாவங்களையோ சைகைகளையோ பயன்படுத்தித் தமது கருத்துகளைத் தெரிவிக்க ஊக்குவித்தல் வேண்டும்.

**வளரறி மதிப்பீடு (ஆ) / தொகுத்தறி மதிப்பீடு**

**உதவி தேவைப்படும் பகுதிகள்**

மதிப்பீட்டுத்தாளில் பயன்படுத்தப்பட்டுள்ள மொழியினைப் புரிந்துகொள்ளுதல்.

எ.கா. – வரிசைப்படுத்துதல், பலவுள் தெரிவு வினா, மாற்றுப் பதில்கள், குறு / நெடு விடைகள்

**மதிப்பீட்டிற்கான பொது வழிமுறைகள்**

- வினாவின் நோக்கத்தை நன்கு புரிந்துகொள்ள வினாவினை மாற்றி அமைத்தல்.
- தேவைப்பட்டால் வினாவினை வாய்மொழியாகவோ சைகைகள் மூலமோ கேட்கலாம்.

**II. பார்வைக் குறைபாடு**

**கண் பார்வையிழந்தோர் / பார்வைக் குறைபாடுடையோர்**

ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்வதே கண்பார்வையிழந்தோர் மற்றும் பார்வைக் குறைவுடையோருக்குக் கடினம்.

**மதிப்பீட்டிற்கான பொது வழிமுறைகள்**

- குழந்தையின் பார்வைத்திறன் மேம்பட உதவும் கருவிகளான மூக்குக் கண்ணாடி, உருப்பெருக்கிக் கண்ணாடி, மேசை விளக்கு, சாய்தளப்பலகை போன்றவற்றை மாணவர் முறையாகப் பயன்படுத்துவதனை உறுதிசெய்தல்
- வாய்மொழியாகச் செய்திகளைத் தருவதோடு மட்டுமின்றி, எழுத்துச் செய்தி அனைத்தையும் வாய்மொழியாகக் கூறுதல்
- கண்பார்வையிழந்தோருக்குப் ப்ரெய்ல்முறையில் தேர்வு நடத்தி அதனை அச்செடுத்து, மதிப்பீடு செய்தல்
- ஐந்தாம் வகுப்புக்குமேல் இம்மாணவருக்குத் தேர்வு எழுதப் பதிலி எழுத்தர் (Scribe) ஒருவரை நியமித்தோ கணினி மூலமோ மதிப்பீடு செய்யலாம்.
- பார்வைக் குறைவுள்ளோருக்கு உதவும்வகையில் நல்ல வெளிச்சம், போதுமான உருப்பெருக்கி முதலியவற்றை அளிக்கலாம்.
- மதிப்பீட்டின்போது மிகுதியான காலம் தேவைப்படும்.

**வளரறி மதிப்பீடு (அ)**

**உதவி தேவைப்படும் பகுதிகள்**

பார்வை சார் செயல்பாடுகள்

**வழிகாட்டுதல்கள்**

- துணைப்பாட நூல்கள் பிரெய்ல் நூலிலோ பெரிய எழுத்தால் அச்சடிக்கப்பட்ட நூல்களையோ மாணவருக்கு வழங்குதல் வேண்டும்.



www.kalvisolai.com

- செயல்பாட்டைப் பற்றிய விளக்கமான வழிகாட்டிக் குறிப்பினை அளித்தல் வேண்டும்; அல்லது, செயல்களின் வழியாகச் செயல்பாடு பற்றிய விளக்கம் தருதல் வேண்டும். (எ.கா) கைவினைப் பொருள்கள்
- பார்வைக் குறைவு உடையவர்கள் செயல்பாட்டில் எளிதாக ஈடுபட அவனுக்கு தடித்த ஸ்கெட்ச் பேனா, மார்க்கர் பேனா முதலியவை அளித்தல் வேண்டும்.
- விரல்களால் உணர்ந்து செய்யும் கைவினைப் பொருள்கள் மற்றும் மாதிரிகள் ஆகியவற்றை அவர்களையே செய்ய வைத்தல் வரவேற்கத்தக்க கற்றல் விளைவைத் தரும்.
- கற்கும்போது இம்மாணவர்களுக்கு உடன்பயிலும் மாணவர்கள், அவர்களுக்கான பின்னூட்டத்தினை வழங்கலாம்.
- வரைதல் மற்றும் குறித்தல் செயல்பாடுகளில் மாணவருக்கு ஒரு படத்தைக் கொடுத்து, அதன் பாகங்களைக் குறிக்கச் செய்யலாம்.

**வளரறி மதிப்பீடு (ஆ) / தொகுத்தறி மதிப்பீடு**

(எ.கா.) படித்தல் திறன் மற்றும் எழுதுதல் திறனுக்கான செயல்பாட்டைத் தருதல் வேண்டும்.

**செயல்படுத்துவதற்கான நெறிமுறைகள்**

- உரிய விதிமுறைகளைக் கடைப்பிடித்தல் வேண்டும்.
- படித்தல் மற்றும் எழுதுதல் செயல்பாட்டுக்கான நூல்கள் பெரிய எழுத்துகளுடனும், உயர்ந்த மட்டத்தில் (Embossed) எளிதில் உணரக்கூடிய அளவுக்கு அமைக்கப்பட்டுள்ள படங்கள் மற்றும் வரைபடங்கள் போன்றவை பார்வைக் குறைபாடுள்ள மாணவ மாணவியருக்குத் தேவைப்படும்.
- பார்வைக் குறைபாடுள்ள குழந்தைகளுக்கு எளிதில் மாறுபடுத்திக் காட்டும் தடித்த கோடுகளிட்ட ஏடுகள் தடித்த கோடிட்ட கட்டங்கள் உள்ள கணித ஏடுகள் தேவைப்படும்.

**III. மூளை முடக்குவாதம்** (Cerebral palsy)

மூளை முடக்குவாதம், புலன்சார்ந்த குறைபாடாக இருப்பினும், அக்குழந்தைகள், படிப்பதிலும் பேசுவதிலும் கருத்துப் பரிமாற்றத்திலும், குறைபாடு உடையவர்களாக இருப்பர். இக்குழந்தைகளின் தனிப்பட்ட தேவை மற்றும் பலத்தினைப் பொருத்து மதிப்பீடு அமையும்.

**மதிப்பீட்டிற்கான பொது நெறி முறைகள்**

- இக்குழந்தைகள், ஒவ்வொரு செயல்பாட்டின்மீதும் அவர்கள் வசதிக்கேற்ற அமரும் நிலையோ சரியான நாற்காலியோ வழங்கப்பட்டிருக்கின்றதா என்பதனை உறுதி செய்தல் வேண்டும்.

- வெவ்வேறு முறைகளான உடல் அசைவு, சைகை, கருத்துத் தொடர்பு விளக்க அட்டைகள் மூலமாக, அக்குழந்தைகளைப் கருத்துப் பரிமாற்றத்திற்கு ஊக்குவிக்கலாம்.
- பேச இயலாத குழந்தைகளுக்கு, மாற்றுமுறைகளாகப் படங்கள், குறியீடுகள், எழுத்துக்கள் மற்றும் வார்த்தை அட்டைகள் தேவைப்படும்.
- இக்குழந்தைகள் எழுதுவதற்குப் பதிலி எழுத்தர் (Scribe), கணினி, கருத்துத் தொடர்பு அட்டைகள் ஆகியவை அளித்தல் வேண்டும்.
- அவர்களுக்கு மாற்று எழுதுகோலோ பென்சிலோ அளிக்கலாம்.

## IV. கற்றல் குறைபாடு (Learning Disability)

கற்றல் குறைபாடானது குழந்தையின் வாசிக்கும், எழுதும், பேசும் மற்றும் கணக்குப் போடும் திறன்களை பாதிக்கிறது. மேலும், கருத்துகளை முக்கியத்துவத்தின்படி தொகுத்தல், அறிவார்ந்து வரிசைப்படுத்துதல் மற்றும் உயர்தரத் திறன்கள் போன்றவற்றில் பிரச்சினைகளைச் எதிர்கொள்வர்.

### பொது நெறிமுறைகள்

- பணிகளை முடிக்க இக்குழந்தைகளுக்கு மிகுதியான காலம் தேவைப்படும்.
- செயல்பாடுகளைச் சிறுசிறு பகுதிகளாகப் பிரிக்கலாம்.
- செயல்பாட்டைச் செய்து காண்பித்து, முடிவினையும் மாணவருக்குக் காண்பிக்கலாம்.
- எழுத்துமூலமாக வழங்கும் பின்னூட்டத்தைவிட, வாய்மொழி மதிப்பீடு மாணவர் தாம் கற்றவற்றைப்பற்றி அதிகம் புரிந்துகொள்ள உதவும்.
- மாணவரை ஆசிரியருக்கு அருகிலேயே அமரச் செய்தால், மாணவருக்குத் தேவையான உதவி செய்ய இயலும். தேவைப்படும் உதவியைத் தன்னிடம் கேட்டுப் பெறுமாறு மாணவரை ஆசிரியர் ஊக்குவித்தல் வேண்டும்.

### வளரறி மதிப்பீடு FA (a)

### உதவி தேவைப்படும் பகுதிகள்

மொழிசார்ந்த செயல்பாடுகள், வாசித்தல் மற்றும் எழுதும் செயல்பாடுகள்

**எ.கா.**பட்டிமன்றங்கள், கலந்துரையாடல்கள், கதைகள் எழுதுதல், அகரமுதலிப்பணி, வீட்டுப்பாடம்



www.kalvisolai.com

**மதிப்பீட்டிற்கான பொது வழிகாட்டுதல்கள்**

- தொடக்கநிலையில் மாணவர்களைக் கலந்துரையாடலின் கருத்தினை உணர்ந்து, அதில் ஈடுபடுத்துதல் வேண்டும்.
- மாணவர்கள் மாற்று விடையளிக்கும் வகைகளான வாய்மொழியில் விடைதருதல், ஒலிப்பதிவு, விவரித்தல், மாதிரிகள் உருவாக்குதல் போன்றவற்றை அனுமதிக்கலாம்.
- மாணவர்களுக்குக் கிடைக்கும் ஓய்வுநேரங்களிலும், நூலகத்திற்கு ஒதுக்கப்பட்ட நேரங்களிலும் அவரவரின் படிக்கும் நிலைக்கேற்பவும் புத்தகங்களைப் படிக்க அனுமதிக்கலாம்.

**வளரறி மதிப்பீடு (ஆ) FA (b) / தொகுத்தறி மதிப்பீடு**
**உதவி தேவைப்படும் பகுதிகள் –** படித்தல் மற்றும் எழுதுதல், ஒலித்தல், கணிதம்

**எ.கா.** அனைத்துச் செயல்பாடுகள்

**மதிப்பீட்டிற்கான பொது வழிமுறைகள்**

- குழந்தைகளுக்கு அறிவுரைகள் வழங்க பெரியவர்களின் உதவி தேவை.
- குழந்தைகளின் வாய்மொழி விடைகளைப் பதிவுசெய்ய ஒரு பதிலி எழுத்தர் தேவைப்படலாம்.
- மதிப்பீட்டின்போது இலக்கணத்தையும் எழுத்துப் பிழையையும் கணக்கில் கொள்ளாமல் உட்பொருளையே மதிப்பிடுதல் வேண்டும்.
- தேவைப்பட்டால் மாணவர்களுக்குக் கணிப்பான் (Calculator) பயன்படுத்தவோ வாய்மொழியாகக் கூறவோ மாணவர்களை அனுமதிக்கலாம்.
- கூட்டல் மற்றும் பெருக்கல் வாய்பாடு பட்டியலை மாணவர்களுக்கு வழங்கலாம்.
- கணக்குகளைச் செய்துபார்க்க மிகுதியான இடம் ஒதுக்குதல் வேண்டும்.
- நெடுவிடைகளும் கேள்வியைச் சிறுசிறு விடைகள் நாடும் பல சிறு வினாக்களாக மாற்றித் தரலாம்.

## V. மனவளர்ச்சி குன்றியோர் (Mentally Retarded)

மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் நாள்தோறும் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் அனுபவங்களும், தகவல் பரிமாற்றமும் கடினமானது.



www.kalvisolai.com

### செயல்படுத்துவதற்கான நெறிமுறைகள்

- மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு எந்த ஒரு செயலைச் செய்வதற்கும் விடை அளிப்பதற்கும் போதுமான நேரம் வழங்குதல் வேண்டும்.
- கற்றலை வலுவூட்டத் தேவையான இடங்களில் திடப்பொருள்கள், பார்த்துப் புரிந்து கொள்ளக்கூடிய கருவிகளை வழங்குதல் வேண்டும்.
- மாணவர்களிடம் பேசும்போது எளிய, வழக்கத்திலுள்ள சொற்களையும் சைகைகளையும் பயன்படுத்தி, அவர்களின் புரிதலை அறிய கூறப்பட்ட கருத்துகளைத் திரும்பக்கூறச் செய்தல் வேண்டும்.
- குழந்தைகளின் திறமைக்கேற்றவாறு எளிய செயலை வழங்குதல் வேண்டும்.

### வளரறி மதிப்பீடு (அ)

மனப்பாடம் செய்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் பன்முகச் செயல்பாடுகளை அளிக்கலாம். மேலும் செய்யுளை ஒப்புவித்தல், கலந்துரையாடல், அகவய வினாக்கள், கதைப்புத்தகங்களைப் படித்தல், மனவரைபடம் வரைதல் முதலியவற்றில் ஈடுபடுத்தலாம்.

### செயல்படுத்துவதற்கான நெறிமுறைகள்

- செயல்பாட்டினைச் செய்ய செயல்முறைவிளக்கம் கற்றல் வெளிப்பாட்டிற்குத் தேவையான துணைக்கருவிகள் தேவைப்படலாம்.
- அகவயத் தொடர்பான செயல்பாடுகளுக்குக் குறிப்பிட்ட சொற்கள், தொடர்கள் துணைத்தலைப்புகள், வழிகாட்டும் வினாக்கள், குறிப்புகள் முதலியன தேவைப்படும். (எ.கா. படைப்பாற்றல் திறன், மனவரைபடம் மற்றும் அகவய வினாக்கள்)
- மாணவர்களின் திறனுக்கேற்பப் பாடத்துடன் தொடர்புடைய வீட்டுப்பாடம் வழங்குதல் வேண்டும்.

### வளரறி மதிப்பீடு (ஆ) FA (b) / தொகுத்தறி மதிப்பீடு SA

படித்தல், எழுதுதல்( எழுத்துக்கூட்டி) , கணக்கு முதலிய செயல்பாடுகளை வழங்கலாம்.

- எ.கா. இரண்டுக்கு மேற்பட்ட விடைகளைப் பொருத்தும் முறை, சிறிய மற்றும் பெரிய விடைகளை அளித்தல்.

### செயல்படுத்துவதற்கான நெறிமுறைகள்

- குழந்தைகளுக்குக் குறிப்புக்களைப் படித்துக்காட்ட பதிலிப் படிப்பாளர் ஒருவரை நியமிக்கலாம்.
- வாய்மொழி விடைகளைப் பதிவுசெய்ய ஒரு பதிலி எழுத்தரை நியமிக்கலாம்.



www.kalvisolai.com

- கணிப்பான் பயன்பாடு அல்லது வாய்மொழி விடைகளை அனுமதிக்கலாம்.
- கூட்டல் வாய்பாடு மற்றும் பெருக்கல் வாய்பாடுகளை வழங்கலாம்.
- வாய்மொழி மற்றும் பாடம்சார்ந்த அறிவுரைகளுக்குப் பார்த்துப் புரிந்துகொள்ளக்கூடிய துணைக்கருவிகளை வழங்கலாம்.
- விரிவான விடைகளுக்குரிய வினாக்கள் சிறிய அளவில் பகுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**VI. புற உலகச் சிந்தனையற்றோர் (Autism)**

கேட்பனவற்றைப் பகுப்பாய்வு செய்யும் திறனில்லாமையால் இத்தகு குழந்தைகளால் மிகுந்த கவனம் செலுத்தவோ பிறர் கூறுவதைப்புரிந்து கொள்ளவோ இயலாது. வேறுபட்ட பல செய்திகள் அடங்கிய கட்டளைகளை இவர்களால் புரிந்துகொள்ளவோ பின்பற்றவோ இயலாது. ஒரே ஒரு செய்தி தாங்கிய சொற்றொடர்கள் மட்டுமே இவர்களால் புரிந்து கொள்ள இயலும்.

செய்தியைப் பரிமாறுவதில் உள்ள சிக்கல்களால் இக்குழந்தைகள் ஒரு குழுவில் முன்னிலை வகுக்கவோ, குழுவோடு இணைந்து செயலாற்றவோ இயலாது.

**செயல்படுத்துவதற்கான நெறிமுறைகள்**

- குழந்தைகள் தமக்கு வழங்கப்படும் செயல்பாடுகளை முடிக்க, பெருமளவிலான நேரத்தை எடுத்துக்கொள்வார்கள்.
- வாய்மொழி விடை, படம் வரைதல், தட்டச்சு, படம் சுட்டிக்காட்டுதல், கடிதம், சொற்கள் முதலியவை மதிப்பீட்டின்போது அனுமதிக்கலாம்.

**வளரறி மதிப்பீடு (அ) – FA(a)**

கலந்துரையாடல், சூழலைப் புரிந்துகொள்ளுதல், நீளமான செயல்விளக்கக் குறிப்புகளைப் புரிந்துகொள்ளுதல், ஒரு வேலையைத் தொடர்ந்து செய்தல், ஒரு வேலையை வெற்றிகரமாகச் செய்து முடித்தல், பாத்திரமேற்று நடித்தல், பட்டிமன்றம் / சொற்போர், மனவரைபடம் வரைதல், திறந்த/ பலவிதமான விடைகள் தரக்கூடிய வினாக்கள் முதலியவற்றை வளரறி செயல்பாடாக வழங்கலாம்.

**செயல்படுத்துவதற்கான நெறிமுறைகள்**

- குழந்தைகளுக்குக் கண்ணால் பார்த்துப் புரிந்துகொள்ள உதவும் பொருள்கள், படங்கள், சொல்லட்டைகள், செய்கைகள் மற்றும் பிற வாய்மொழி செயல்விளக்கக் குறிப்புகள் தேவைப்படலாம்.



www.kalvisolai.com

- உடன்பயிலும் மாணவர்கள் மற்றும் பிற வயது வந்தோர் துணையோடு செயல்பாடுகளைச் செய்து முடிக்கலாம்.
- மாதிரி ஒன்றையும், இறுதிநிலை முடிவையும் மாணவருக்குக் காட்டி, அவரைச் செயல்பாடுகள் செய்ய இணங்கச் செய்யலாம்.
- படைப்பாற்றல் எழுத்து, மனவரைபடம் வரைதல், திறந்த கேள்விகள் போன்றவற்றைச் செய்ய முயற்சிக்கும் மாணவருக்கு உதவியாக இன்றியமையாத சொற்கள், சொற்றொடர்கள், துணைத் தலைப்புகள் வழிகாட்டும் கேள்விகள் மற்றும் குறிப்பிட்ட செயல்விளக்கக் குறிப்புகள் முதலியவற்றைத் தரலாம்.
- ஒரு செயல்பாட்டிலிருந்து மற்றொரு செயல்பாட்டுக்கு முன்னேற ஆசிரியரின் தூண்டல் இம்மாணவர்க்குத் தேவைப்படலாம்.
- மாற்றுச்செய்திப் பரிமாற்றத்திற்கான மாற்றுவழிகளைச் சுட்டிக்காட்டல், தெரிவு செய்தல், படஎழுத்து, சொல்லட்டைகள் போன்றவற்றையும் பயன்படுத்த அனுமதிக்கலாம்.

**வளரறி மதிப்பீடு (ஆ) / தொகுத்தறி மதிப்பீடு**

செயல்விளக்கக் குறிப்புகளைப் புரிந்துகொள்ளுதல், எழுதுதல், மனத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட மாறிகளை வைத்துச் சிந்தித்தல், ஒரு வேலையைத் தொடர்ந்து செய்து முடித்தல் எண்களை அடுக்குதல் சிறிய / பெரிய விடைகள் அளித்தல், விடைகளைப் பொருத்துதல் முதலிய செயல்பாடுகளை இம்மாணவர்களுக்கு வழங்கலாம்.

**செயல்படுத்துவதற்கான நெறிமுறைகள்**

- குழந்தைகளுக்குக் குறிப்புகளைப் படித்துக்காட்ட பெரியவர் ஒருவர் தேவைப்படலாம்.
- குறைந்த அளவு கவனச்சிதறல் ஏற்படும்வண்ணம் தேர்வுகள் போதிய கால இடைவெளியில் நடத்துதல் வேண்டும்.
- விரிவான விடைகளுக்குரிய வினாக்கள் சிறிய அளவில் பகுத்து வழங்குதல் வேண்டும்.
- இரண்டுக்கும் மேற்பட்ட தர அளவீடுகள் பயன்படுத்த நேரிட்டால், ஒருநேரத்தில் ஒரு தரநிலை அளவீடு மட்டுமே பயன்படுத்துதல் வேண்டும்.
- கணிப்பான் அல்லது வாய்மொழி விடையை அனுமதிக்கலாம்.
- கூட்டல் மற்றும் பெருக்கல் வாய்பாட்டினை வழங்கலாம்.
- ஒரே மாதிரியான கணக்குகளைத் தொகுத்து வழங்கலாம். ஒரு மாதிரியைத் தந்த பிறகே வினாக்கள் கேட்டல் வேண்டும்.



www.kalvisolai.com

## வகுப்பறையில் பயன்படுத்தப்பட வேண்டிய சுவரொட்டிகள்

